# தமிழ் ஒளி / ஸ்ரீலங்கா
## சனசமூக நிலையம் மணி விழாக்கால
# வரலாற்றுச் சிறப்பு மலர்
(1960 – 2020)

# Thamil Ozhi / Sri Lanka Community Centre



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஒளி / ஸ்ரீலங்கா சனசமூக நிலையம் மணிவிழாக் காலம் வரை வரலாற்றுச் சிறப்பு மலர்

# *Thamil Ozhi / Sri Lanka Community Centre*

## *Book of History UntiL Diamond Jubilee*

**(1960 - 2020)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஒளி சன சமூக நிலையம்

முன்னாள் ஸ்ரீ லங்கா சனசமூக நிலையம்

ஸ்தாபிதம் 1960 ஏப்ரல் 30

ஸ்ரீலங்கா வீதி, உடுவில், சுண்ணாகம்

காலம் :- 1960 - 2020 வரை

நூலாசிரியர்:- திரு. தம்பு பாலசுப்பிரமணியம்
உடுவில் / சுண்டுக்குளி.

அன்பளிப்பு: 300.00

தொ.பேசி இல :- 077 2379962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஒளி சனசமூக நிலையத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



இவ்வரலாற்றுக் குறிப்பினை எழுதியுள்ள திரு.தம்பு பாலசுப்பிரமணியம் அவர்கள் ஸ்ரீலங்கா வீதி, உடுவில் என்னும் முகவரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் ஒரு மூத்த பிரஜையாவார்.

1959ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட "ஜெகஜோதி சனசமூக நிலையம்" சொந்தக் காணியில்லாத காரணத்தால் செயலிழந்து உருக்குலைந்து கட்டடப் பொருட்கள் கைவிடப்பட்ட நிலையில் அக்கட்டிடப் பொருட்களை எமது கிராமத்தின் ஒருசில மாணவர்களுடன் எடுத்துவந்து தங்கட்கு உரித்தான காணியில் "ஸ்ரீலங்கா சனசமூக நிலையம்" என்ற பெயர் கொண்ட சனசமூக நிலையத்தை உருவாக்க ஒரு பிரதான நபராகச் செயற்பட்டார். இதன் காரணமாய் எமது கிராம மக்கள் இவரை ஸ்ரீலங்கா சனசமூக நிலையத்தின் "முதலாவது தலைவராக" தேர்ந்தெடுத்தனர் என அறிய முடிகிறது.

இவர் திருமணம் செய்த காரணமாய் சுண்டுக்குளி என்ற கிராமத்தில் குடியிருந்த போதிலும் எமது சனசமூக நிலையத்தின் அவ்வப்போது நிகழும் நிகழ்வுகளில் பங்குபற்றி எமது நிலையத் திற்கு ஒத்துழைப்பு நல்கி வருவது பாராட்டத்தக்கது. எமது சனசமூக நிலையத்தின் வரலாற்றினை எழுதுவதனை நானும் வரவேற்கிறேன்.

இவரின் சமூகப்பணி, எழுத்துப்பணி தொடர மென்மேலும் வாழ்த்துகிறோம்.

நன்றி.

**சிவகுருநாதன் டினேசன் - தலைவர்**

**தமிழ் ஒளி சனசமூக நிலையம் - உடுவில்.**

**தொ.பே : 077 6838110**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப்பொலிவுடன் மணிவிழாக்காணப்போகும் தமிழ்ஒளி சனசமூகநிலையத்தின் வரலாற்றுப்பதிவு



இந்நிலையத்தில் 14 ஆண்டுகள் தலைமைப் பதவியில் பயணித்தமையினால் இவ் வரலாற்றின் பெரும்பங்கினைப் பதிவு செய்வதில்பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

முதற்கண் எமது சமூகத்திற்கு ஒன்று கூடஒரு இடம்வேண்டும், நிலையம் வேண்டு மெனசமூகத்தின் வளர்ச்சியினை மனதிற் கொண்டு நிலையம் அமைத்திட வித்திட்ட தாதையர்கட்கும்முன்னாள்உறுப்பினர்கட்கும்மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எல்லா வளங்களும் நிறையப்பெற்ற எமது கிராமத்தில் ஓலைவீடுகளை அகற்றி கல் வீடுகளாய் அமைக்கவேண்டும் என்றகாரணத்தால் அமைந்த எமது வெற்றியைப் பதிவுசெய்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். வீட்டுத்திட்டப் பயனாளிகளை எப்படி இனங்காண்பது என்பதனை எமக்கு அரசாங்க அதிபர் பணிமனையில் பயிற்சியளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் என்னுடன் செயலாளராய் கடமையாற்றிய திரு.பாலசிங்கம்பாலகிரிதரன் என்பவருடன் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தை அணுகிபத்து (10) வீடுகள் பெற்றுக்கொடுத்தோம்.

அடுத்த நிர்வாகமாற்றத்தின் மூலம் சுப்பிரமணியம்சுதர்சன், செயலாளர் என்னுடன் இணைந்து மேலும் பலவேலைத் திட்டங்களைச் செயற்படுத்தி வெற்றிகண்டோம். யுத்தகாலத்தினால் அழிவடைந்த வீடுகளை மேற்கோள் காட்டி "நேப்" நிறுவனத்தின் அனுசரணையுடன் J/186 கிராமப் பிரிவு முழுவதற்குமாக 24 வீடுகளையமைத்துக் கொடுக்கப்பட்டது. இத்தனை வேலைத்திட்டங்களும் சனசமூக நிலையத்தில்வைத்தே வழங்கப்பட்டது. பயனாளிக்கட்கு எப்படி வீடுகள் அமைக்கப்பட வேண்டு மெனநிலைய மண்டபத்திலேயே பயிற்சியளிக்கப்பட்டது. அசாதாரண சூழ்நிலையிலும் எமதுநிலைய நிர்வாகக் கட்டமைப்பின் பயனாகவேபாரிய வேலைத் திட்டங்கள் எமது கிராமத்தை வந்தடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிசாப் புயல் பாதிப்பினால் எமதுமக்கள் கோயில்களில் தங்கவைக்கப்பட்டுள்ள போதுநிலையத்தில் Letterhead.முத்திரைபோன்றவற்றைப் பயன்படுத்தி 180 குடும்பங்கட்குதலா 7500/= பெறுமதியான நிவாரணப் பொருட்கள் வழங்க ஏற்பாடுசெய்தோம்.மேலும்பல வேலைத்திட்டங்களை செய்ய முடியு மென எமது மனதில் தோன்றிய நம்பிக்கையின் அடிப்படையில் திரு.கந்தையாமாசிலாமணி அவர்களது ஆலொசனையின் பிரகாரம் நிலையத்தை நிரந்தரமானதும் மாடிக் கட்டடமாக்க வேண்டுமென்ற சிந்தனையிலிருந்த எமக்கு திரு.கிருஸ்ணர் இராஜேஸ்வரன் (ரவி) அவர்களிடமிருந்து வந்த நற் செய்தியினைப் பயன் படுத்தி அவசரமாக வேண்டுதல் கடிதம் ஒன்றினைத் தயாரித்து திரு.தம்புநல்லராசா மூலம்அதிகாலை 5 மணிக்கு கொழும்பிற்கு திருமதி.விஜயகலா அம்மணியிடம் சேர்ப்பித்ததன் பிரகாரம் அதற்கான நிதிரூபா பத்துலட்சம் பெறும் வாய்ப்புக் கிட்டியது. இந்தக் கால கட்டத்தில் செயலாளராக திரு.ரஞ்சித் எட்மன் என்னுடன் பணியாற்றினார் .

அதே சமயம் கற்களினால் கட்டப்பட்ட நிலையம், அதனுடன் முன பள்ளி இதனை எப்படி அகற்றாமல் எமக்குப் பயிற்சி பயிற்சியளிக்கப்பட்டதன் அடிப்படையில் நோக்கினால் இக்கட்டிடம் உடைக்க அனுமதி கிடையாது. அப்படி உடைத்த பின் கிடைக்க விருக்கும் நிதியம் அரசியல் மாற்றங்கள் காரணமாக கிடைக்காது போனால் மக்களுக்கு நாம் என்ன பதில்கூறுவ தென்பதனை நினைத்து மிகவும் சிக்கலான சூழ்நிலையில் அரச அதிபரை மூன்று தடவைகள் அணுகி, உறுதிமொழிகிடைக்கப் பெற்றபின் புதியகட்டட நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் திரு.சுப்பிரமணியம் சுதர்சன்தனது கட்டிடஉபகரணம் தந்துதவிபெரும்பங்காற்றினார். திரு.சின்னப்புநல்லையா அவர்கள் கட்டுமானப் பணிக்கு நியமிக்கப்பட்டு திரு.வீ.செல்லத்துரை, திரு.வீ.சின்னத்துரை, திரு.மா.மகாலிங்கம், த.ஜெயராசசிங்கம், மகேஸ்வரன், த.ரஞ்சன் ஆகியோர் இணைந்து கட்டுமானப்பணியில் ஈடுபட்டனர். திரு.செல்வர்முருகேசு அவர்களால் நிலையத்தின் பெயர்சில் வர்தகட்டினால் பொறிக்கப் பட்டது. திரு.சூசைப்பிள்ளை எட்வேட்றெஜினோல்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியஜன்னலும், பொ.பாலசுப்பிரமணியம் வடக்குப்பக்கக்கதவும், நுழைவாயில் கதவை வடிவேலுகஜேந்திரனும், செ.இரத்தினம்மின்விசிறியும், ஜனதாகாந்தன் வாசிப்பு மேசை போன்றவற்றையும் அன்பளிப்புச் செய்தனர். கட்டு மானப் பணியில் இளைஞர் அணித் தலைவர் ப.றஜீவ்எமல் தலைமையில்அணியின் உறுப்பினர்கள் அனைவரும் பெரும்பணியாற்றினர். அத்திவாரம் வெட்டுவதிலிருந்து பிளாற்போடு வது வரை இளைஞர்களின் பங்களிப்பு வரலாற்றுப்பதிவாகியது. எமது பிரதேசசபை உறுப்பினர் செல்வன் துவாரகன் அவர்களது அனுசரணையுடன் தமிழ் ஒளிவிளையாட்டு மைதானம் நிலை யத்திற்குச் சொந்தமாகப் பிரகடனப்பட்டதனையும் இங்கு குறிப்பிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இத்துடன் நிலையத்தின் வரலாறுபுத்தகமாக வெளிவரவேண்டுமென முழுமுயற்சியுடன் செயற்பட்டு எதிர்கால சமு தாயத்திற்கு வழிகாட்டிய முன்னாள் தலைவர் திரு.தம்புபாலசுப்பிரமணியம் அவர்களைப் பெருமையுடன் வாழ்த்தி மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றியுடன்,
மா.பன்னீர்ச்செல்வம்
அம்பலவாணர்வீதி,
உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபர் ஆன்லோறன்ஸ் ராஜ்குமாரின் பேனாவிலிருந்து...



வரலாறு என்பது உலகிலேயே முக்கியமான தொரு அத்தியாயம். வாழ்விலே வரலாறு (History) இல்லையெனில், வாழ்ந்தோம் இறந் தோம் என்றாகிவிடும். வரலாறுதான் முன்னைய வாழ்வுகளையும் நெருக்கமான பாதைகளையும், பசுமையான நினைவுகளை யும் மீட்டித்தருவது, வரலாறு இல்லையெனில் எமது வாழ்க்கைக் காலம் மட்டும் தான் எமக்குத் தெரியவரும். முன்னோர் களாகிய எழுத்தாளர்களால் தான் இன்று பல நூற்றாண்டுச் சம்பவங் களை அறிய முடிகிறது. எல்லோராலும் வரலாற்றை எழுதவும் முடியாது. அந்த வகையில் எமது கிராமத்தைப் பற்றிய மற்றும் சனசமூக நிலையத்தைப் பற்றிய பசுமை நினைவுகளை ஒரு கணம் மீட்டுத்தரும் எனது உறவினர் திரு. தம்பு பாலசுப்பிரமணியம் அவர்கட்கு எனது நன்றிகள்.

எமது சனசமூக நிலையம் பற்றிய வரலாற்றினை எழுதிய திரு. தம்பு பாலசுப்பிரமணியம் அவர்கள் உடுவில் கிராமத்தை பிறப்பிட மாகக் கொண்டவர். இவரது முற்போக்கு சிந்தனைகளை எனது தாயார் மூலம் அறிந்ததுண்டு. இவர் சிறுவயதிலே கல்வியில் சிறந்து விளங்கிய அக்காலத்திலே புலமைப் பரிசுப் பரீட்சையில் சித்திய டைந்து வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று சிறந்து விளங்கியவர். தனது மாணவப்பராயம் தொடக்கம் இன்று வரை சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தியதன் மூலம் அடையாளப்படுத்தியுள்ளார்.

1959ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட "ஜெகஜோதி" சனசமூக நிலையம் ஒருவருட காலத்துக்கள் செயலிழந்து போய்விட்டது. இதன் பின்னர் 1960ம் வருடம் சக மாணவர்கள் பெரியோர்களுடன் இணைந்து ஒரு புதிய சனசமூக நிலையத்தை வேறொரு காணியில் உருவாக்க பிரதான காரணமாயிருந்தார். அச்சனசமூக நிலையத்திற்கு ஸ்ரீ லங்கா சனசமூக நிலையம் எனப் புதிய பெயருடன் அதன் முதலாவது தலைவராகவும் தேர்ந்தேடுக்கப்பட்டாரென அறிய முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் (CTB) நிர்வாக உத்தி யோகத்தர் என்ற உயர் பதவி வகித்ததுடன், ஓய்வு நிலையிலுள்ள இவர் பல அரசசார்பற்ற நிறுவனங்களில் Programme manager Asst. Team Leader போன்ற பதவி நிலையில் இருந்ததுடன் யாழ்ப்பாணம் YMCA நிறுவனத்திலும் Vice - President ஆகப் பதவி வகித்துள்ளார்.

சனசமூக நிலையம் 60 ஆண்டினைப் பூர்த்தி செய்து மணி விழா நடைபெறவுள்ள இக்காலத்தில் அவரின் சேவைகள் தொடர வாழ்த்து வதுடன், சுகநலத்துடன் கூடிய நீண்ட ஆயுளையும் பெறும்படி பிரார்த்திக்கிறேன்.

**திருமதி ஆன் லோறன்ஸ் இராஜகுமார்**
**பிரதி அதிபர்**
**உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் சிறுவயது பசுமை நினைவுகள்

எமது கிராமத்தில் 1960ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சனசமூக நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்நேரம் நான் பன்னிரண்டு வயதுச் சிறுவனாக இருந்தேன். அக்காலங்களில் நிலையத்தில் பல நல்ல நிகழ்வுகள் நடைபெறுவதுண்டு. சனசமூக நிலையத்தினர், கிறிஸ்துவின் பிறப்பினை முன்னிட்டு கரோல் நிகழ்வுகள் நடாத்தி வந்தனர். இந்நிகழ்வுகட்கு 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களான அப்பச்சி. கமலநாதன், (மகேந்திரம்), தம்பிஐயா. இராசரத்தினம், தம்பு மகாதேவா (சின்னக்கிளி), பொன்னையா. கிருஷ்ணபிள்ளை (கிட்டுணு), தம்பிஐயா. இராசலிங்கம் (செல்வா), வீமர், இராசதுரை ஆகிய 06 சிறுவர்களை பாடல்கள் பாட, ஆடல்களுக்காக தேர்ந்தெடுத்தனர். நாங்கள் நள்ளிரவுவரை வீடு வீடாகச் சென்று கரோல் ஊயுசுழுடு கீதங்கள் இசைப்போம். இல்லத்தவர்கள் எங்களிற்கு அன்பளிப்பு செய்வர். அப்படி முதல் நாளில் எமக்கு ரூபா.65 கிடைத்தது. தொடர்ந்து ஐந்து நாட்களும் சென்றபோது மொத்தமாக ரூபா.375 அன்பளிப்பு கிடைத்தது. இவை அனைத்தும் சனசமூக நிலையத்திற்கு வழங்கப்பட்டது. எங்களுடன் வாலிபர்கள், பெரியவர்கள் எனப்பலர் கரோலில் கலந்து கொண்டனர். இப்படியே படிப்படியாக எமது நிலையம் வளர்ச்சியடைந்து இன்று மாடிக் கட்டடமாக மிளிர்கிறது. இதற்காக அர்ப்பணிப்புடன் சேவை செய்த தலைவர்கள், நிர்வாகத்தினர் மற்றும் உறவினர்களை வாழ்த்துகிறேன். இனிவரும் காலத்திலும் மென்மேலும் வளர்ச்சியடைந்து மணிவிழா ஆண்டில் மக்கள் சேவை தொடர்ந்தும் செய்ய இறைவன் துணை புரிவாராக.



**நன்றியுடன்**

**அப்பச்சி கமலநாதன் (மகேந்திரம்)**

**ஸ்ரீலங்கா வீதி உடுவில் - தொ.பே :- 077 9596250**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கான சேவைகள் ஒருபோதும் மறக்கப்படுவதில்லை.



ஒரு கிராமத்தின் வளர்ந்துவரும் சமுதாய வளர்ச்சிக்கு அப்பிரதே சத்தில் சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியமா கும். இதனால் மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்துவதுடன் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள், விளையாட்டு நிகழ்வுகள், நூல்களைக் கற்பதனூடாக சிந்தனைத்திறனை அதிகரித்து பண்பான ஒரு சமுகத்தினை உருவாக்குவதற்கு வசதியாக அமையும். அத்துடன் சனசமூக நிலையத்தின் மூலம் இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்து சமூகத்தில் மழுங்கிக் கிடக்கும் செயற்திட்டங்களை மீட்டெடுத்து முற்போக்கான செயற்திட்டங்களாக மாற்ற முடியும். இத்தகைய உயரிய நோக்குடன் இவ்வரலாற்றினைப் படைத்த நூலாசிரியர் அன்று முற்போக்கு எண்ணம் கொண்ட அக்கால இளைகளையும் ஒன்றி ணைத்து இந் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. அன்று சொந்தக் காரணி யின்றி 1959 ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட "ஜெகஜோதி" சனசமூக நிலையம் ஒரு வருட காலத்தினுள் செயலிழந்து போனபோது சொந்தக் காணியின்றி பல இன்னல்கள் மத்தியில் ஒரு சிறு கொட்டகை போல் ஆரம்பிக்கப்பட்டு ஒரு தசாப்த காலத்தின் பின் அக்காணியினைச் சொந்த மாகப் பெற்று சிறிய ஒரு கட்டடமாக நிலையம் மீள் உருவம் பெற்றது. இன்று அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஒரு மில்லியன் (100 0000-00) வேலைத் திட்டத்தின் கீழ் நிலையம் மாடிக்கட்டடமாக புத்தெழுச்சியுடன் காட்சியளிக்கிறது.

இத்தகைய சனசமூக நிலையத்தின் பலாபலனை மேலும் அனுபவத்திருக்கிறன். எனது இருபத்தி மூன்றாவது வயதில், நிலையத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டு விழாவின் போது நான் நிலையத்தின் தலைவராகச் செயற்பட்டேன்.

நான் எனது A/L கல்வி முடிந்தபின் அசர சேவையில் இருந்தா லும் சரி அன்றேல் வெளிநாட்டு வேலை வாய்ப்பினைப் பெற்று நாடு திரும்பிய போதும் சரி, சனசமூக நிலையத்திற்கு என்னாலான சகல ஒத்துழைப்புகளையும் நல்கி வந்துள்ளேன். எனது தலைமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற 25 ம் வருட ஆண்டு விழாவை என்னால் இன்னும் மறக்க முடியாதுள்ளது.

இத்தகைய வந்து பெருமை வாய்ந்த நிலையத்தின் வரலாற்று நூல் ஒன்று இருந்தார் இவ் வரலாற்றினை இளம் சமூகத்தினர் மட்டுமன்றி, வரப்போகும் சந்ததியினரும் அறிந்து கொள்ள வாய்ப்பிருக்கும் என்பதுடன் மட்டுமன்றி வரலாறு திரிவுபடுத்தப்படக் கூடாது என்ற எண்ணமும் பேணப்படும். இதனை நிவர்த்தி செய்யும் நோக்குடன் இவ் வரலாற்றினை எழுதுபவரும் இச் சனசமூக நிலையத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும் ஆற்றல் மிக்கவருமாயுள்ள திரு. தம்பு பாலசுப்பிரமணியம் அவர்களால் இயன்றளவில் விபரங்களைப் பெற்று நெறிப்படுத்திய இவ்வரலாற்று நூலை உருவாகியுள்ளமை போற்றப்படத்தக்கது. நிலையம் மென்மேலும் சிறப்புடன் சேவை செய்ய வாழ்த்துகிறேன்.


**என்றும் உங்களுடன்**

**கிருஷ்னர். இராஜேஸ்வரன் (ரவி)**
**மல்வம், உடுவில் (முன்னாள் நிலையத் தலைவர்)**
**ஓய்வுநிலை உள்ளகக் கணக்காய்வு உத்தியோகஸ்தர்**
**பிரதேச செயலகம். உருவில்.**
**தொ.பே : 077 5354102**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா சனசமூக நிலையம்
SRILANKA COMMUNITY CENTRE
ESTD / ஸ்தாபிதம் : 1960.04.30






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இளமைக் காலத்தில் அனுபவித்த கொடுமைகள் பற்றி...



சிறுபராயம் தொட்டு பெற்றோருடன், குறிப்பாக 1960ம் வருடத்திலிருந்து இன்று வரை சுகபல மாய் வாழ அற்புததேவன் இயேசு கிறிஸ்து கிருபையளித்துள்ளார் என்பது மிகையாகாது.

கழி மண்ணினால் சுவரிட்டு பனை ஓலை, கிடுகு போன்றவற்றால் வீடு வேய்ந்த சிறு குடிசையில் மண் எண்ணெய்குப்பி விளக்கின் ஒளியில் வாழ்க்கை வாழ்ந்தோம். இவ்வேளையில் தான் ஒற்றை மாட்டு வண்டி, இரட்டை மாட்டு வண்டி, குதிரை வண்டி, றிக்சோ, சயிக்கிள், புகையிரத வண்டி போன்றவற்றில் மக்கள் பயணம் செய்வர். விவசாயம் செய்பவர்கள் தமது பொருட்களை சந்தைக்கு சுமந்து செல்லும் போது இடையில் சுமைதாங்கியில் இறக்கி வைத்து இளைப்பாறுவார்கள். இந்தக் கால வாழ்க்கை முறையில் தான் சாதி வெறி தாண்டவமாடியது. பாடசாலைக் கிணற்றில் தாகத்துக்குத் தண்ணி குடிப்பதற்கு எடுக்க மறுக்கப்பட்டு கை மண்டையில் தண்ணீர் பருகத்தந்த காலத்தை மறக்க முடியுமா? இன்னும் தேனீர் சாலையில் தேனீர் குடிக்கச் சென்றால் உள்பேணியோ? வெளிப்போணியோ என்று கேள்வி கேட்டதன் பின்னர் தான் தேனீர் தருவார்கள். பஸ் வண்டியில் பயணம் செய்வதாயின் ஆசனம் வெறுமையாக இருந்தாலும் நின்று தான் பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை மறக்க முடியுமா? இறந்த பின்னர் சடலத்தை சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்றால் அங்கும் சாதிக் கொடுமைதான். இந்துக் கோயிலுக்கு கடவுளை வழிபடச் சென்றால் அங்கும் உட்சென்று வணாங்க முடியாமல் வெளியில் நின்று தான் கடவுளைத் தரிசிக்க முடியும். இப்படியான சொல்லொணாத்துயரை எமது இளமைக் காலத்தில் எதிர் கொண்டோம்.

இந்நேரத்தில் தான் 1960ம் வருடம் எமக்கென்று குரல் கொடுக்கும் ஒரு நிறுவனமாக எமது சமூகத்திற்குச் சொந்தமாக ஸ்ரீ லங்கா சனசமூக நிலையம் என்ற ஒரு நிறுவனம் உதயமாயிற்று. இந் நிலையம் ஊடாக நாங்களும் எங்களை வளப்படுத்திக் கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அது இன்று மாடிக் கட்டடமாக காட்சியளிப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது முன்னைய துயரத்தை மறக்க வைக்கிறது.

எது எப்படியிருப்பினும் இவை அத்தனைக்கும் மேலாக எங்களை இந்த நவீன காலத்தில் உயர்த்தி வாழ்வை செழிப்படையவைத்த இன்றும் உயிருடன் உள்ள இயேசுக் கிறிஸ்துவின் செயல் அதிசயமானதாகும்.

இந்த நூலில் எனது கருத்தையும் எழுத்துருவிய வெளியிட சந்தர்ப்பம் தந்த இந்த நூலாசிரியர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கட்கும் எனது அன்பார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.


**கந்தையா மாசிலாமணி**

**ஸ்ரீலங்கா வீதி, உடுவில்.**

**தொ.பே : 077 8397648**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் ஒளி சனசமூக நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியக் கனவுகள் படைத்தது சரித்திரம்



169, அம்பலவாணர் வீதி,

உடுவில், சுன்னாகம்.

30.08.2020

எந்தவொரு சமுதாயமானாலும் அது வளர்ச்சி அடைவதற்கு அரசியல், பொருளாதாரம் மட்டுமல்ல கல்விச்செல்வமும் அவசியமா னது. நாங்கள் எமது கல்வியினை பாடசாலைகளினூடாகப் பெற்றுக் கொண்டோம். அது ஒரு குறிப்பிட்ட வயதுடன் முடிவடைந்துவிடும். ஆனால் மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டிருக்க வேண்டியது என்பது உண்மையாகும். அந்த வகையில் நாம் பாடசா லையை விட்டுவிலகினாலும் எமது அறிவுசார் விடயங்களைப் பெற்றுக் கொள்ள சனசமூக நிலையங்கள் உதவுகின்றது.

நான் பத்து வயதுச் சிறுவனாக இருந்த காலத்தில் எமது கிராமத் தில் "ஸ்ரீலங்கா சனசமூக நிலையம்" ஒன்று இருந்தது எனக்கு இன்னும் ஞாபகத்திலுள்ளது. தினசரிப் பத்திரிகைகள் வாசிப்பதுடன் நின்றுவிடாது வருடா வருடம் பல கலை நிகழ்வுகள், மெய்வல்லுனர் போட்டிகள், சைக்கிள் ஓட்டப்போட்டிகள், பெண்களுக்கான விசேட நிகழ்வுகள், நாடகங்கள் எனப் பலவற்றைக்கண்டு களித்துள்ளோம்.

அன்று சாதாரண கொட்டிலாக ஆரம்பிக்கப்பட்டு இன்று "தமிழ் ஒளி சனசமூக நிலையம்" என்ற புதிய பெயரில் மாடிக்கட்டடமாக தலைநிமிர்ந்து 60 வருடத்தை தாண்டியுள்ளமை மகிழ்ச்சியளிக்கி றது. இந்நிலையம் மென்மேலும் வளம் பெற்று சேவைசெய்ய வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

அத்துடன் எனக்கும் ஒரு வாழ்த்துரை வழங்க சந்தர்ப்பம் தந்த நூலாசிரியருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

**முதலி பரமநாதன்**

**(ஓய்வுநிலை கூட்டுறவுச்சங்க உத்தியோகத்தர்)**

**தொ.பே : 021 224 1897**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தாய் மக்கள் நாம் என்போம்



இலங்கை, திருநாட்டின் வட பதிதியில் "உடுவில்" எனும் புகழ் மிக்க கிராமம் உள்ளமை பெறுமதிமிக்க தொன்றாகும். பல பாரம்பரியங் களைக் கொண்டு சிறப்பாக விளங்கும் இக் கிராமத்தின் சிறப்பினை மென்மேலும் மெருகூட்டக் கூடிய விடயங்களில் "தமிழ் ஒளி சனசமூக நிலையமும்" ஒன்றாகும்.

1960ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட இந் நிலையம் ஆரம்ப காலத்தில் "ஸ்ரீலங்கா சனசமூக நிலையம்" என பெயரிடப்பட்டது. அக்கால மாணவர்கள், இளைஞர்கள் ஊர்மக்கள் ஆகியோரின் பெரும் அதரவுடன் 1960 இல் ஆரம்பிக்கப்பட்ட இன்றுவரை தனிச் சிறப்புமிக்க தொன்றாக விளங்கி வருவது மிகவும் பாரட்டத்தக்க விடயமாகும்.

பெரியோர்களின் வழிகாட்டலுடன் மிகவும் சிறப்பாக இயங்கிய இந்நிலையத்தில் பற்பல பெரியவர்கள் தலைவர்களாய் இருந்து சேவை செய்து, காலத்துக்குக் காலம் உயர்வடைய வைத்து வெற்றி கண்டமை சிறப்பாகும். அன்றிலிருந்து இன்றுவரை வருடா வருடம் நடைபெறும் ஆண்டு விழாவுடன் மெய் வல்லுனர் நிகழ்வுகள், கலை நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற பல அம்சங்களும் இடம்பெற்று வருகின்றமை சிறப்பாகும்.

மேலும் சிறுவர்களை நல்வழிநடத்தும்படியாக குறிப்பிட்ட சில காலங்களில் "முன்பள்ளி" நடாத்தி முறையான வகையில் சிறார்களை ஆயத்தப்படுத்தி அதில் வெற்றி கண்டதும் பெரும் சாதனையாகும்.

பல மதங்களைச் சார்ந்தவர்கள் ஒற்றுமையுடன் வாழும் இவ்வூரில் சகல மதங்களுக்கும் மதிப்பளித்து கிறிஸ்மஸ், வருடப் பிறப்பு, தைப்பொங்கல், சரஸ்வதி பூசை போன்ற அனைத்தையும் முன்னின்று நடத்தி வருகின்றமை மகிழ்ச்சி தரும் ஒரு விடயமாகும்.

மேலும் இந்நிலையத்தினால் பல சமூகப்பணிகள் முன்னின்று செய்வதனையும் காண முடிகின்றது. அன்று ஆரம்பிக்கப்பட்ட இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையம் இன்றுவரை எமது ஊரின் பெறுமதிமிக்க சொத்தாகவும் ஊரின் பெருமையை வெளிப்படுத்தும் ஒன்றாகவும் காணப்படுவது மிகவும் பெருமையான விடயமாகும். இடைப்பட்ட காலத்தில் (1991) ஸ்ரீலங்கா சனசமூக நிலையம், தமிழ் ஒளி சனசமூக நிலையம் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டமை அந் நேரத்தில் தமிழர்கள் எதிர்கொண்டிருந்த போராட்ட நெருக்கடியை தவிர்க்கக் கூடிய நிகழ்வாக இருந்தது.

இந் நிலையத்தின் சிறப்பினை மென்மேலும் உயர்த்து முகமாய் இந்நிலையம் பற்றிய வரலாற்று நூல் ஆக்கம் அமைகிறது. இந் நூல் மூலம் அறியப்படாத இன்னும் பல விடயங்கள், இளம் சமுதாயத்தின ரை சென்றடைய என் மனமார்ந்த வாழ்த்துக்கள் மற்றும் எமது சனசமூக நிலையம் மேலும் தனது பணிகளையும், செயற்பாடுகளை யும் திறமையாக மேற்கொள்வதுடன், இந்த வரலாற்றினை நூல் வடிவில் வெளிக்கொணர்ந்த எமது ஸ்ரீலங்கா சனசமூக நிலையம் என்ற ஆரம்பப் பெயருடன் நிறுவப்பட்ட சனசமூக நிலையத்தின் முதலாவது தலைவர் திரு.தம்பு பாலசுப்பிரமணியம் அவர்களின் அர்ப்பணிப்பினையும் பாராட்டுகிறேன்.

**என்றும் அன்புடன்,**

**டினேசன் சர்மிக்கா**

**தொ.பே : 077 6838110**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஒளி நிலையம் பற்றிய ஓர் நோக்கு



இயற்கை எழில்மிகு இலங்கைத் திருநாட்டில் விவசாயத்துறையினையும், கடல்தொழிலையும் வாழ்வாதாரமாய்க் கொண்ட இலங்கையின் வட பகுதியான யாழ்ப்பாணம் நகரின் வலிகாமம் பகுதியில் அமைந் துள்ள இயற்கை அழகுமிகு விவசாயத் தொழிலை மையமாகக் கொண்ட கிராமமே உடுவில் பிரதேசமாகும்.

பெண்களின் கல்வி உரிமை பாதிப்படைந்து காணப்பட்ட காலப் பகுதியில், தென் கிழக்கு ஆசியாவில் உலகிலே முதலாவது பெண்கள் பாடசாலையாக 1824ம் ஆண்டு பெண்களின் கல்வியைக் கொண்டு வரும் முகமாக உடுவில் மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதாகும். அந்த வகையில் அறிவு, திறன், தன் நம்பிக்கைகள், ஒழுக்க விழுமியங்கள் மற்றும் பழக்கவழக்கங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் 1960 ம் ஆண்டு உடுவில் வடக்கு பிரசேத்திலுள்ள குடியிருப்பாளர்களின் மன எண்ணப்படி இங்குள்ள முன் மாதிரியான இளைஞர்கள் சிலர் முன் வந்து, ஸ்ரீலங்கா சனசமூக நிலையம் என்ற பெயரில் ஒரு சனசமூக நிலையத்தினை ஸ்தாபித்தனர். அன்றைய நாளிதள்களை அம்மக்கள் வாசிக்க வழிப்படுத்தினார்கள்.

இவை மட்டுமன்றி தமிழ் ஒளி சனசமூக நிலையத்தில் சமூகத் தின் ஒற்றுமை, ஒருமைப்பாடு என்பனவற்றை மேம்படுத்தும் நோக்குடன் இங்குள்ள இளைஞர் யுவதிகள் சிறுவர் சிறுமிகளின் ஒற்றுமையாய் பலப்படுத்தும் வகையில் வருடாந்தம் ஆண்டு விழா மிகக் கோலாகல மாக திட்டமிட்டு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் தமிழ் ஒளி சனசமூக நிலையமானது இப்புதிய மாடிக் கட்டடத்தில் மக்களுக்கான தனது சேவையை மென்மேலும் மேம் படுத்தி நற்பிரஜைகளைக் கொண்ட சமூகத்தை உருவாக்க உறுதுணையாகவிருக்கும்.

**சுப்பிரமணியம் நீதிராசா - ஆசிரியர் -0770712523**

**யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் குறிப்பு



எமது சனசமூக நிலையம் 1960 ம் வருடம் "ஸ்ரீலங்கா சனசமூக நிலையம்" என்ற பெயரில் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் "முதலாவது தலைவராக" தம்பு பாலசுப்பிரமணியம் ஆகிய நான் 1960 ம் வருடம் ஏகமனதாய் தெரிவு செய்யப்பட்டேன், அன்று மாணவர்களாகிய எம்மால் நிலையம் ஆரம்பிப்பட்ட போது எமக்குப் பக்கபலமாக மூத்த சகோதரரான திரு. செல்லப்பா இரத்தினம் அவர்கள் செயற்பட்டார், அதனைத் தொடந்து முழுக்கிராமமும் இணைந்து சனசமூக நிலையத்துக்கு ஒத்துழைப்பு நல்கி சிறப்பாக நடத்தி வந்தார்கள். காலத்துக்கு காலம் இந்நிலையம் சிறப்பாகச் செயற்பட்டு வந்தது. ஒருவர் பின் ஒருவராக மாறி மாறி வந்த தலைவர்கள், நிர்வாகத்தினர், பொது மக்கள் என்ற அனைவரும் நிலையத்திற்குப் பெருமை சேர்த்து, கொட்டில் வடிவமாக இருந்த நிலையத்தினை சிமெந்துக் கட்டடமாய்க்கட்டி, தற்போது மாடிக்கட்டடமாய் அழகான தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

மணிவிழா கொண்டாட வேண்டிய அறுபது (60) வருடம் பழமை வாய்ந்த நிலையம் பற்றிய ஆவணம் ஒன்று தெளிவாக இருக்க வேண்டும் என்ற உன்னத நோக்கில் இதனை எழுதும் எண்ணம் எனக்கு ஏற்பட்டது. எமது "ஜெகஜோதி" சனசமூக நிலையம் ஸ்தாபிக்கப்பட்ட போது அதில் பிரதான இடம் வகித்த மூத்த உறுப்பினர் சின்னப்பு நல்லையா அவர்களும், எமது சம வயதுடைய கந்தையா மாசிலாமணி அவர்களும் எமக்கு இளைய தலைமுறையான அப்பச்சி கமலநாதன் (மகேந்திரம்) அவர்கட்டும். திரு. பாலசிங்கம் பாலகிரிதரன் (கிரி) அவர்கட்கும் வரலாறு பற்றிய ஒரு சில தகவல்கள் தந்து உதவியமைக்கு நன்றிகள் உரித்தாகட்டும். இதுபோல எனக்குப் பக்கமலமாக நின்று அவ்வப்போது ஆலோசனை வழங்கியும் உற்சாகப்படுத்தியவருமான சின்னமணி ஆன்லோறன்ஸ் ராஜகுமார் அவர்களுக்கும் எனது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்துக்கும் மேலாக என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய எனது பெற்றோர் பொன்னர் தம்பு, தம்பு தங்கப்பிள்ளை ஆகியோரின் அன்புடன் கூடிய அர்ப்பணிப்பை நினைத்துப் பார்க்கிறேன், இதனைப்போல என்னை இறைவனின் ஜீவ ஒளிக்குள் என்னை வழிநடத்தி, இன்று கர்த்தருள் நித்திரையடைந்த பாசமிகு மனைவி மேரி நற்குணம் அவர்களையும் மறக்க முடியாமல் பிரார்த் திக்கிறேன். இவர்கள் மூவருக்கும் எனது எழுத்துப் பணியினை சமர்ப்பணமாக வைக்கிறேன். மேலும் இந்த மணிவிழாக்கால சஞ்சிகையை சிறப்பாக அச்சேற்றி வெளியிட உதவிய யாழ்ப்பாண அச்சக ஸ்தாபகத்தினருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தம்பு பாலசுப்பிரமணியம்**


**சிறிலங்கா வீதி, உடுவில் / சுண்டுக்குளி யாழ்ப்பாணம்.**

**தொ.பே : 077 2379962**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பால்ய நினைவுகளை மீட்டுப் பாரக்கிறேன்.



நான் இவ்வுலகில் பிறப்பதற்கு எட்டு (08) வருடங்களுக்கு முன் 1960 ம் வருடம் ஸ்ரீலங்கா சனசமூக நிலையம் உருவாக்கப்பட்டது. நான் 1968 ம் வருடம் திரு.ஐயாத்துரை-மகேஸ்வரி தம்பதியினர்க்கு மகனாகப் பிறந்தேன். என் சிறு பாரயத்தில் பலநல்ல நிகழ்வுகளை நிலையத்தில் கண்டு மகிழ்ந்தேன். நானும் சிறுவயதில் சிறுவர்களுக்கான ஒரு சில நிகழ்வுகளில் பங்குபற்றி இருக்கிறேன். எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் அந் நினைவுகள் அழிவதில்லை. அந்த இனிய நாட்களும் ஆண்டுக ளும் இனிவரப் போவதில்லை. இச்சனசமூக நிலையம் 1960 ம் வருடம் குறிப்பிடப் பட்ட ஒரு சில மாணவர்களால் (மாணவர் பெயரைக் குறிப்பிட விரும் பவில்லை) ஆரம்பிக்கப்பட்ட போது அவர்களுக்கு உறுதுணையாக எனது பெரியப்பா திரு.செல்லப்பா இரத்தினம் என்பவர் அர்ப்பணிப் புடன் செயல்பட்டமையை எனது பெற்றோர்கள் மூலம் அறிய முடிந்தது. இவர்களால் ஆரம்பிக்கப்பட்டு ஊர்மக்களால் ஒற்றுமை யாய் வளர்த்தெடுக்கப்பட்டு, இன்று மாடிக்கட்டடமாய் காட்சியளிப் பதைக் காணும் போது உருவாக்கிய வர்களை நன்றியுடன் நினைக்கின்றேன். என் ஞாபகத்திலுள்ள ஒரு நிகழ்வினைக் கூறுகிறேன். 1979 ம் வருடம் திரு. கந்தசாமி நாகேஸ்வரன் (ரவி) தலைமையில் சிறப்பாக நடைபெற்ற ஆண்டு விழா நிகழ்வில் என்னுடன் சூசைப்பிள்ளை கிறிஸ்ரி கந்தசாமி அதிசயராசா, யோகராசா விஷ்ணு, நல்லையா நகுலராசா போன்ற அன்றைய சிறுவர்கள் பங்குபற்றி சிறப்பித்தகாட்சி என் கண்முன் நிற்கிறது. இப்பொழுது எத்தனை மாற்றங்கள், எத்தனை வளர்ச்சிகள். எம் சனசமூகநிலையம் பல்லாண்டு காலம் நிலைத்திருந்து சேவை செய்ய வாழ்த்துகிறேன். சந்தர்ப்பம் வழங்கிய பாலு மாமாவுக்கு நன்றி.

**என்றும் உங்களுடன் ஐயாத்துரை சகீன்ஸ்குமார்**
**உடுவில்/மத்தியூஸ் வீதி, யாழ்நகர்.**
**தொ.பே : 0776113062**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுவில் கிராமம் :-

உடுவில் (Uduvil) இலங்கையின் வடக்கே, யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் பகுதியில், உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராமம். இது நான்கு புறமும் நெல் வயல்களும், மரக்கறி விளை நிலங்களும் சூழ்ந்துள்ள ஊர். யாழ்ப்பாண நகருக்கு வடக்கே சுமார் 08 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. சுண்ணாகம் சங்குவேலி, கந்தரோடை, மானிப்பாய், சுதுமலை இணுவில் என்னும் ஊர்கள் உடுவிலின் எல்லைகளாக அமைந்துள்ளன. யாழ்ப்பாண நகரிலிருந்து வடக்கு நோக்கி உடுவிலைத் தொட்டுச் செல்லும் காங்கேசன்துறை வீதியும் (KKS Road) மருதனார்மடம் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி உடுவிலை ஊடறுத்துச் செல்லும் கைதடி-மானிப்பாய் வீதியும் உடுவில் ஊடான பிரதான போக்குவரத்து மார்க்கங்களாகும்.

## மக்கள் :-

இங்குள்ள மக்கள் தமிழர்களாவர். பேசும் மொழி தமிழ் மொழி. இங்கு இந்துக்களும் கிறிஸ்தவர்களும் ஒருங்கே வாழ்ந்து வருகிறார் கள். கிறிஸ்தவர்களில் கத்தோலிக்க மதத்தினைப் பின்பற்றுகிறவர்கள் - அதிகமானாலும் புரட்டஸ்தந்து மதத்தையும், பிற்காலத்தில் தோன்றிய சுயாதீன சபையைச் (FREE CHURCH) சேர்ந்த கிறிஸ்தவ மதப் பிரிவுகளைப் பின் பற்றுகிற வர்களும் வாழ்கிறார்கள்.

## தொழில்கள் :-

ஆரம்ப காலத்தில் இங்குள்ள மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் கட்டுமானத் தொழில் விளங்கி வந்தது. ஆயினும் கல்வி வளர்ச்சியாலும், மக்கள் பொருளாதார ரீதியாக முன்னேற விளைந்த மையாலும், வாழ்க்கைச் செலவு மற்றும் இதர அத்தியாவசிய தேவைகளை முன்னிட்டும் தற்போதைய இளம் சந்ததியினர் அரசாங்க, மற்றும் தனியார் தொழில்களை பெரும்பாலும் நாடிச் செல்கின்றனர். அனேகர் மேற்கு நாடுகளில் புலம்பெயர்ந்து பொருளா தாரத்தில் முன்னேறி தமது குடும்பத்திற்கும் ஏனையோர்க்கும் உதவுபவர்களாக வாழ்ந்து வருகின்றனர், பலர் புதிய வியாபார, வணிக முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்தியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுவிலில் அமைந்துள்ள பாடசாலைகள் :-

i. உடுவில் மகளிர் கல்லூரி, (தரம் 1 முதல் உயர்தரம் வரை). அமெரிக்க மிஷனால் நிறுவப்பட்ட பெண்கள் பாடசாலை. இலங்கையில் பிரபலமான பாடசாலைகளில் ஒன்று தென் கிழக்கு ஆசியாவில், பெண்கள் தங்கிப் படிப்பதற்கான முதலாவது ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையாகும். இதற்கென ஒரு நீண்ட தனி வரலாறும், கல்விப்பாரம்பரியமும் இருக்கிறது.

ii. இராமநாதன் மகளிர் கல்லூரி.

iii. யாழ் பல்கலைக்கழக இசை, நுண்கலைப்பிரிவு.

iv. உடுவில் MANNS English School

v. UduviL HoLy Rosary RC School - (தற்போது இயங்குவதில்லை)

vi. உடுவில் முருக மூர்த்தி வித்தியாசாலை

vii. உடுவில் AMTM. School.

## உடுவில் அமைந்துள்ள இந்து ஆலயங்கள் சில :-

1. உடுவில் மீனாட்சி சுந்தரரேசுவரர் ஆலயம். உடுவில் கிராமத்தில் அமைந்துள்ள பிரபலமான இந்து ஆலயம் எனவாம். இது பொதுவாக உடுவில் அம்மன் கோயில் என்றும் அறியப்படுகிறது.
2. உடுவில் காளி அம்பாள் ஆலயம்.
3. ஞான வைரவர் ஆலயம், காலம்சென்ற முருகப்பா அவர்களால் அவரது சொந்தக் காணியில் ஆரம்பிக்கப்பட்டது.

## கிறிஸ்தவ, கத்தோலிக்க ஆலயங்களும் சுயாதீன கிறிஸ்தவ சபைகளும் :-

1. உடுவில் புனித செபமாலை ஆவயம். பல இலட்சம் ரூபா செலவில் புதிதாக புனரமைக்கபட்ட பிரமாண்டமான தோற்றம் கொண்ட ஆலயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உடுவில் அமெரிக்கமிஷன் கிறிஸ்தவ தென் இந்திய திருச்சபை CSI தேவாலயம். உடுவில் மகளிர் கல்லூரியுடன் இணைந்து உள்ளது.

3. உடுவில் அப்போஸ்தலிக திருச்சபை மானிப்பாய் வீதி, உடுவிலில் அமைந்துள்ளது. சிறிலங்கா வீதியில் குடியிருந்த புஸ்பமலர் அந்தோனி மற்றும் சூசைப்பிள்ளை பூமணி மேரிதிரேசா ஆகியோரின் இல்லத்தில் வீட்டுக்கூட்டமாக ஆரம்பிக்கப்பட்டு, படிப்படியாக வளர்ச்சியடைந்து, தற்போது மானிப்பாய் வீதி, உடுவில் எனும் ஊரில் இவ்வாலயம் அமைந்திருக்கிறது.

## சன சமூக நிலையம் உருவாக்கம்

### "ஜெகஜோதி" சனசமூக நிலையம் (சிறி லங்கா வீதி, உடுவில்)

காலத்திற்குக் காலம் உலக ஒருங்கிற்கமைவாக சகல இடங்களிலும் மாற்றங்கள் நிகழ்வது நியதி. இந்த வகையில் எமது சிறிலங்கா வீதி அமைந்துள்ள எமது கிராமத்திலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியது.

1950 ம் வருடங்களின் பிற்காலங்களில் எமது கிராமத்திற்கு, அளவெட்டி என்னும் கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியர் திரு.வ. பொன்னம்பலம் M.A அவர்களது பிரசன்னம் ஏற்பட்டது. இவர் சுண்ணாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிராந்தியத்திற்குப் பொறுப்பாக இருந்தார். இவர் புகழ்பூத்த அரசியல்வாதியும், தலை சிறந்த பேச்சாளரும், சமூக சேவையாளருமாவார். எமது கிராமத்து மக்கள் செய்துவந்த சுய தொழில் காரணமாக, இத் தொழிலாளர்கட்கான தொழிற்சங்க வேலைகளையும் மேற்கொண்டு வந்தார். இவர் மக்களைச் சந்திப்பதற்காகவும்,

தொழிற்சங்க வேலைகளைக் கவனிப்பதற்காகவும் இட வசதிகளை காலம் சென்ற சின்னக்குட்டி கணபதிப்பிள்ளை அவர்கள் தனது வீட்டினைப் பயன்படுத்த அவ்வப்போது கொடுத்து உதவினார். இவர் ஒரு கட்டிட ஒப்பந்தக்காரராவார். (Building Contractor) இவரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டு எம்மில் பல குடும்பங்கள் தொழில் வாய்ப்பனைப் பெற்று சீவனத்தை மேற்கொண்டனர். அக்காலத்தில், கல் வீடுகள் என்பது விரல் விட்டு எண்ணக்கூடிய 4, 5 வீடுகள் மட்டுமே இருந்தது. அதில் திரு. சி.கணபதிப்பிள்ளை அவர்களின் வீடும் ஒன்றாகும். ஏனைய குடியிருப்பாளரின் வீடுகள் மண்ணினால் கட்டப்பட்டு, கிடுகு அல்லது பனையோலையினால் வேயப்பட்ட சிறிய, பெரிய வீடுகளாகும்.

அக்காலத்தில் மக்களது பொதுப் பாவனைக்கு அல்லது சகலரும் ஒன்று கூடுவதற்கான ஒரு பொதுவான மண்டபம் கிடையாது. இதன் காரணத்தினால் சனசமூக நிலையம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கம் மக்கள் மத்தியில் குறிப்பாக அன்றைய இளைஞர்கள் மத்தியில் உருவாகியது. இந்த எண்ணமும் விழிப்புணர்வும் ஆசிரியர் திரு.வ.பொன்னம்பலம் அவர்களது மக்கள் நலன் கருதிய செயற்பாட்டி னால் உதயமானது எனலாம். கிராமத்தில் வதியும் பெரியோர்கள், வாலிபர்கள், இளைஞர்கள் அனைவரும் ஒன்றி ணைந்து ஒருவரது சொந்தக் காணியில் சனசமூக நிலையத்தினை உருவாக்க முயன்ற னர். ஆனால் காணி தந்துதவ ஒருவரும் முன்வரவில்லை. ஈற்றில் திரு திருமதி பர்ணாந்து கண்மணி அவர்களது (தற்போது கனடாவிலுள்ள ஜெயராசா, குஞ்சு) குடியிருந்த காணியில் சனசமூக நிலையத்திற்கான கொட்டகையை உருவாக்கினர்.

இந்தச் சனசமூக நிலையக் கொட்டகைக்கு தேவையான மரங்கள் தூண்கள் சிலாகைகள் தேவைப்பட்டது. அந்நேரம் அமரர் சின்னத்துரை என்பவரிடம் அவர் பயன்படுத்திய பழைய கொட்டிலினை மிகவும் மலிவான விலையில் கொள்வனவு செய்தனர். அந்தக் கொட்டில் ரூபா 75/= க்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. குடியிருப்பாளர்கள் ரூபா 5/= 3/= 2/= 1/= என்று அன்பளிப்புச் செய்து கொட்டில் வாங்கப்பட்டது.

அந்த நேரம் ஒரு பக்கற் சிமைந்து ரூபா 7.25/= க்கு விற்கப்பட்டது. ஒரு லொறி (Lorry) மணல் (15 ரூபா அல்லது 20 ரூபாவுக்கு வாங்கலாம் சிமெந்தினால் கட்டக்கூடிய வாய்ப்புகள் இருந்தும், சனசமூக நிலையத்திற்குச் சொந்தக்காணி இல்லாத காரணத்தால் அந்த நோக்கம் கைகூடவில்லை.

1959 ம் வருடம் சனசமூக நிலையம் உருவாக்கப்பட்டது. அந்தச் சனசமூக நிலையத்திற்கு "ஜெகஜோதி" சனசமூக நிலையம் எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் சூட்டப்பட்டது. நிலையத் திறப்புவிழா மிக விமரிசையாக நடைபெற்றது. எமது உடுவில் கிராமத்தில் இதுதான் முதன் முதலாக நடைபெற்ற பொதுவானதொரு மக்கள் விழாவாக இருந்தது. குறிப்பாக எமது சமூகம் சார்ந்த சொந்த நிகழ்வாக இருந்தது.

சனசமூக நிலையத்தின் தலைவராக திரு ஞானப்பிரகாசம் தேவசகாயம் (துரையன்ணை) தெரிவு செய்யப்பட்டார். அன்று இவர்தான் எம் ஊரில் கல்வியில் உயர் நிலையிலிருந்தார். இவர் யாழ்ப்பாணம் ST. PATRICK's College இல் ஆங்கில மொழிமூலம் கல்விகற்று SSC பரீட்சையில் சித்தியடைந்திருந்தார். இவருக்கு உதவியாக நிவாகசபை உறுப்பினர்களாக திரு சின்னப்பு நல்லையா, தானியேல் ஆசீர்வாதம், கணபதிப்பிள்ளை இராசதுரை, இறப்பியேல் மார்க்கண்டு, செல்லர் ஐயாத்துரை, செல்லப்பா தம்பிராசா, செல்லர் துரைராசா (நடேசு) வேலர் சின்னத்துரை, பண்டரி யோசெப், செல்லர் முருகேசு மற்றும் அன்றைய துடிப்புள்ள மூத்த வாலிபர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இன்னும் பலர் இந் நற்காரியத்தில் ஈடுபட்டனர். இது தவிர பல குடும்பத் தலைவர்களும் உதவியாயிருந்தனர்.

ஊரில் உள்ள அனைவரும் ஓய்வு நேரங்களில் பத்திரிகைகள் படிப்பார்கள். அன்று தேசியப் பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன் ஆகிய இரு பத்திரிகைகள் வெளிவந்தன. ஒரு பத்திரிகையின் விலை 15 சதம் பொதுமகள் ஐக்கியப்படும் இடமாக சனசமூக நிலையம் விளங்கியது. இந்த ஐக்கியமும் மகிழ்ச்சியும் ஒரு வருடத்திற்கு மேல் நிலைக்கவில்லை. சனசமூக நிலையக் காணி உரிமையாளர் சனசமூக நிலையத்தினை வேறொரு இடத்திற்கு இடமாற்றம் செய்யும்படி கேட்டுக் கொண்டார். எனவே சனசமூக நிலையத்தினைப் பிடுங்கி வேறொரு இடத்திற்கு மாற்ற வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டது கவலைக்குரியதானது.

ஈற்றில் சனசமூக நிலையம் உருக்குலைந்து கப்பும், மரங்களும், சிலாகைகளுமாக மாறிவிட்டது. இப்பொருட்கள் யாவும் எமது ஒழுங்கையில் ஒரு பக்கமாய் போடப்பட்டிருந்தது. இவற்றினைப் பாதுகாப்பாக வைத்தெடுக்க ஒரு காணியும் கிடைக்கவில்லை. இந்தப் பொருட்கள் பல நாட்களாய் வீதியில் போடப்பட்டிருந்த நிலையில் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தது. வீதியால் கடந்து செல்லும் போது அனைவர்க்கும் கவலையாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிலங்கா சனசமூக நிலையத்தின் வரலாறு :

இதன் வரலாற்றினை எழுதும் நான் (தம்பு. பாலசுப்பமானியம்) எனது ஆரம்பக் கல்வியினை உடுவில் செபமாலை மாதா றோமன் கத்தோலிக்க பாடசாலையில் (Holy Rosary Roman Catholic School) பெற்றேன், அந்தப் பாடசாலையில் ஐந்தாம் (05) வகுப்பு வரையுமே வகுப்புகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. தலைமை ஆசிரியர் உட்பட மூன்று ஆசிரியர்கள், படிப்பித்தனர். அதில் சின்னப்பு சிசிலியா (தவமணி ரீச்சர்) அவர்களும் ஒரு ஆசிரியர். நான் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த காரணத்தால். வசாவிளான் அரசினர் மத்திய கல்லூரியில், விடுதியில் தங்கி எனது இடைநிலைக் கல்வியினை மேற் கொண்டேன். நான் SSC பரீட்சையில் சித்தியடைந்து அக் கல்லூரியில் HSC எனும் உயர் வகுப்பில் கவ்வியினைத் தொடர்ந்து அதன் பின்னர் பாடசாலையி னின்று இடை விலகி, சுண்ணாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் எனது HSC வகுபினைத் தொடர்ந்தேன். என்னைப் போல அந்நேரம் ஐயம்பிள்ளை தேவமலர் (வவியக்கா) ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் HSC விஞ்ஞானப் பிரிவில் ஆங்கில மொழி மூலம் கல்வியினை மேற்கொண்டார். திரு.இராசேந்திரம் (பொன்னுத்துரை) யோசெப்பும் HSC வகுப்பில் படித்தார். தினமும் பாடசாலைக்கு நான் அவ்வீதியால் நடந்து சென்று வரும்போதெல்லாம் எமது சனசமூக நிலையக் கட்டடப் பொருட்கள் வீதியோரத்தில் போடப்பட்டிருந்ததைக் காணும் போது எனக்கும் கவலையாயிருந்தது.

அக்காலத்தில் பல இளைஞர்கள் இருந்தர்கள். சிலர் தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். கல்வியை இடைவிலகி நிறுத்திக் கொண்டவர்கள் சுயதொழில், விவசாயம், கட்டுமானத் தொழில், சிறு வியாபாரம், Business போன்ற தொழில்களில் தம்மை ஈடுபடுத்தி, சமூகத்தில் உயர் நிலையை நோக்கி வளர்ச்சியடைந்தனர். எமது கிராமம் மிகச் செழிப்பாக இருந்தது, இவ் உருக்குலைந்த சனசமூக நிலையத்தினை மீளவும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற ஒரு விருப்பம் என் மனதில், தீவிரமாய் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

எனது இந்த எண்ணத்தினை நிறைவேற்றுவதற்காக எமது உறவினரும் சக மாணவரும், நண்பர்களுமான திரு. ஐயம்பிள்ளை தவயோகராசா, திரு அப்புப்பிள்ளை நாகரத்தினம் (நாகையா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர் ஆரம்பத்தில் இணைந்து கொண்டனர். இவ் இருவரும் அந்நேரம் உடுவில். மான்ஸ் ஆங்கில பாடசாலையில் கல்வியினை மேற்கொண்டு வந்தனர். ஏனைய மாணவர்களோ அல்லது எமது மூத்த, உறுப்பினர்களோ உடனடியாக எமது இந்த முயற்சியில் இணைந்து கொள்ளவில்லை. எம் மூவருக்கும் உதவியாக அன்று செல்லப்பா இரத்தினம் அண்ணர் அவர்களும் தோளோடு தோள் நின்று உதவி செய்தார். இவர் எம்மைவிட வயதில் மூத்தவர். அவர் மட்டும் மாணவர்களாயிருந்த எமக்குப் பக்க பலமாய் இல்லாதிருந்தால் எமது இந்த இலட்சியப் பயணத்தில் எமக்கு சற்றுப் பின்னடைவு ஏற்பட்டிருக்கலாம். மாணவர்களாகிய நாம் மூவரும், இரத்தினம் அண்ணர் அவர்களின் உதவியுடன் ஆரம்பத்தில் செயல்படத் தொடங்கினோம். இன்று வயதாகிப்போயினும் முன்னைய காலத்தினைப் போலவே இன்றும் பொது விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறார். அது மட்டுமன்றி சன சமூக நிலையத்திற்கு முரண்பாடாக எந்தப் பிழையான செயலிலும் ஈடுபட்டதாக எதுவும் இல்லை. இவர் இந்தளவு தூரம் அக்கறையுடன் பொது வேலைகளில் ஈடுபட்டமைக்கு அவரது மனைவி சரஸ்வதி (சரசக்கா) அவர்களும் எவ்வித தடைகளும் போட்டதில்லை. அத்துடன் சரசக்கா இயல்பாகவே யாருக்கும் உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர்.

## சனசமூக நிலையத்திற்கு காணி பெற்றுக் கொள்தல்:

சனசமூக நிலையத்திற்கு காணி பெற்றுக் கொள்வது பெரும் சிரமமாக இருந்தது. முன்னைய சனசமூக நிலையமும் (ஜெகஜோதி சனசமூக நிலையம்) சொந்தக் காணி இல்லாத காரணத்தால் தான் ஒரு வருடத்தில் அதன் ஆயுள் முடிவடைந்தது அனைவர்க்கும் தெரியும். காணிகள் பலரிடம் தேவைக்கு அதிகமாய் இருந்தமை உண்மை. ஆனால் எவரும் ஒரு சிறிய காணி கொடுக்க முன்வர வில்லை. எமது சனசமூக நிலையம் அமைந்துள்ள சிறிய காணி எனது தாயார் தம்பு. தங்கப்பிள்ளை அவர்கட்கும், கணபதி கிட்டினர் அவர்கட்கும் சொந்தமாயிருந்தது. இந்தக் காணி சிறியதாக இருந்த போதும் இதனைவிடப் பெரிய காணி எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இந்தக் காணியை சனசமூக நிலையத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இதுபற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தகப்பனார் (பொன்னர் தம்பு) அவர்களிடம் எடுத்துக் கூறினேன். அவரும் நல்லதொரு காரியத்திற்குத்தானே கேட்கிறார்கள் என்ற நல்ல எண்ணத்தினை மனதிற்கொண்டு தனது சம்மதத்தைத் தெரிவித்தார். எந்தவித நிபந்தனைகளோ ஒப்பந்தங்க ளோ எதுவுமின்றி சனசமூக நிலையம் கட்டுவதற்கான காணி கிடைத்தது. காணி கிடைத்தவுடன் வீதியில் போடப்பட்டிருந்த கொட்டகைப் பொருட்கள் எடுத்துவரப்பட்டு காணியில் சேர்க்கப்பட்டது.

## சனசமூக நிலைய கொட்டகை அமைத்தல் :

கொட்டகைக்குரிய பொருட்கள் கொண்டு வந்து சேர்ந்த மகிழ்வுடன் நாம் மூவர் அடங்கிய மாணவர்களும். இரத்தினம் அண்ணர் அவர்களும் நிலையத்தினை உருவாக்கும் வேலையை ஆரம்பித்தோம். ஆரம்ப வேலைகள். நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அவ்வீதியால் போய் வருவோர் எம்மைப் பார்த்துச் செல்வர். ஒருவரும் உடனடியாய் உதவிட முன்வரவில்லை.

பின்னர் நாள் செல்லச் செல்ல சனசமூக நிலையத்திற்கு உதவி செய்வதற்காக ஏனையோர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் வரத்தொடங்கியது. சிறியோர் பெரியோர் என்ற வேறுபாடின்றி அனைவரும் செயற்படத் தொடங்கினர். பெரியவர்கள் தங்கள் தங்கள் ஜீவனத்திற்காக வேலைக்குச் சென்றுவிடுவர். மாணவர்களாகிய நாம் அனைவரும் பகல் முழுதும் சனசமூக நிலையம் உருவாக்கும் வேலைகளைச் செய்தோம். அந்நேரம் மாணவர்களான தம்பிப்பிள்ளை தேவராசா, கந்தையா மாசிலாமணி, சின்னப்பு துரைசிங்கம் (செட்டி), கணபதிப்பிள்ளை துரைசிங்கம் (சிங்கம்), நாகர் துரையன், பொன்னையா சண்முகம், பொன்னர் தெய்வேந்திரம், அப்பச்சி மகேந்திரம், வீமர் செல்வத்துரை, விமர் சின்னத்துரை ஆகியோர் மிகுந்த அக்கறையுடன் ஒத்துழைப்பு நல்கினர். இவைதவிர எமக்கு இளைஞர்களாயிருந்த மாணவர்களான தம்பிப்பிள்ளை செவ்வம் - தம்பிப்பிள்ளை இராசரட்ணம், தம்பிஜயா செல்வா, செல்லர் இரத்தினம் (ஓவியம்) போன்றவர்களும் அவர்கட்கு இளைஞர்களான வீமர் இராசதுரை மற்றும் மார்க்கண்டு இராசேந்திரம் (கனி) சனசமூக நிலையத்திற்குத் தமது பங்களிப்பை நிறைவாக நல்கினர். ஒட்டு மொத்தமாக கூறுவதாயின் பெரியோர் தொடக்கம் இளையோர் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலரும் பூரண ஒத்துழைப்பை நல்கினர். சில பல பெயர்கள் இதில் தவறவிடப்பட்டிருக்கலாம். அப்படிப் பெயர்கள் தவறவிடப்பட்டவர்கள் இக்குறைபாட்டினை பெரிது பொருட்படுத்த வேண்டாமென்று மிகவும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எமது புதிய சன சமூக நிலையம் 1960ம் ஆண்டு உருவாக்கப் பட்டுவிட்டது. இதனைக் கட்டி முடிப்பதற்கு பெருந்தொகையான பணம் தேவைப்படாதிருந்த போதிலும் சிறிய சாதாரண தொகைப் பணத்தை பெறுவது கூட எங்களுக்கு சிரமமாயிருந்தது. ஒரு சிலருக்கு முன்னைய சனசமூக நிலையம் (ஜெகஜோதி சனசமூக. நிலையம்) கொடுத்த பட்டறிவு, அத்தகைய நம்பிக்கையீனம் ஏற்பட்டு. பணத்தினை வீண்விரயம் செய்ய வேண்டாமென்ற எண்ணம் ஏற்பட்டிருக்கலாம் செம்பாட்டுக் களிமண்ணினால், அரைச்சுவர்கள் அமைக்கப்பட்டு பக்கச் சுவர்கட்கு பதிலாக, கமுகம் மரச் சிலாகை அடித்து சாக்கினால் சுவர் போன்ற தட்டி அமைத்து சுண்ணாம்பு வெள்ளையால் சாக்குத் தட்டி பூசப்பட்டது. அன்று ஒரு லொறிப்பாரம் செம்பாட்டுமண் ரூபா. 15/= க்குப் பறிக்கப்பட்டது. பத்து கமுகம் சிலாகை கொண்ட சிலாகைக்கட்டு ரூபா. 2.50 க்கு வாங்கப்பட்டது. இந்நேரம் லொறியில் உதவியாளராக வேலை செய்த திரு. பொன்னர் ஐயாத்துரை அவர்கள் எங்கள் சனசமூக நிலையத்திற்கு தேவையான செம்பாட்டு மண் பறிப்பதற்கு உதவியாக செயற்பட்டார்.

அந்நேரம் இப்பணம் எமக்கு பெரிய தொகையாக இருந்தது. ஒரு மேசனுக்குரிய தினச் சம்பளம் 5/= அல்லது 6/= ரூபாவாகும். அது போல ஒரு கூலி வேலை செய்பவருக்கு நாள் கூலி 3/= அல்லது 4/= ரூபாவாகும். இந்நிலையில் நாம் பணம் சேர்க்கும் போது 1 ரூபா 75 சதம், 50 சதம் என்ற தொகைதான் கிடைக்கும். சனசமூக நிலையத்திற்குரிய பெரிய மேசை ஆசிரியர் திரு. வல்லிபுரம் பொன்னம்பலம் அவர்களால் ரூபா. 25/= க்கு கடன் அடிப்படையில் தரப்பட்டது. அமர்ந்திருந்து பத்திரிகை படிக்க இரண்டு வாங்குகள் தேவைப்பட்டது. அதற்கான வாங்கினை அமரர் திரு பாலசிங்கம் அவர்களின் தகப்பன் திரு. சின்னத்தம்பி அவர்கள் மலிவு கூலியில் இரண்டு (02) வாங்குகள் செய்து உதவி செய்தார். இரவு நேரம் விளக்காக பயன்படுத்த செல்வி சுப்பையா (பூவான்றி) அவர்கள் ஒரு பெறுமதியான மண்ணெண்ணய் தூங்கும் விளக்கினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்புச் செய்தர். சனசமூக நிலையத்திற்கான கொடி அனைவரின் எண்ணப்படி சிவப்பு நிறத்தில் உருவாக்கப்பட்டது.

சன சமூக நிலையத்தின் பெயர் "சிறிலங்கா சனசமூக நிலையம்" எனப் பரிந்துரைக்கப்பட்டது. நிர்வாக சபைக்கான கூட்டமும், தலைவர், செயலாளர், பொருளாளர் தெரிவுக்குமான முதலாவது கூட்டமும் வேலர் சின்னப்பு (தற்போது சிவகுமார் / ரூபி) என்பவரது வீட்டில் நடைபெற்றது. சனசமூக நிலையத்தில் போதிய இட வசதி இல்லாத காரணத்தால், பக்கத்து வீடான திரு.வேலர் சின்னப்பு (இராசு அண்ணர்) வீட்டில் முதலாவது கூட்டம் நடைபெற்றது. தற்போது இவ் வீட்டின் உரிமையாளர்கள் திரு. சிவகுமார் ரூபி ஆவர். கூட்டத்தில் திரு. தம்பு பாலசுப்பிரமணியம் ஆகிய நான் தலைவராக ஏகமனதாய் தலைவராய் தெரிவு செய்யப்பட்டேன். செயலாளராக திரு. அப்புப்பிள்ளை நாகரட்னம் (நாகையா) அவர்களும் பொருளாளராக திரு. ஐயம்பிள்ளை தவயோகராசா அவர்களும் ஏகமனதாய் தெரிவு செய்யப்பட்டனர்.

இதுதவிர "சிறிலங்கா சனசமூக நிலையம்" என்ற புதிய பெயரும் சபையில் அங்கீக்கப்பட்டு இப் பெயரினாலேயே சனசமூக நிலையம் அடையாளப்படுத்தப்பட்டது. இதில் மிகவும் சந்தோசப்படக்கூடிய சம்பவம் என்னவென்றால் ஏறக்குறைய குடியிருந்த 90 விகிதம் பொது மக்கள், வயதில் முதியவர்கள், குடும்பத் தலைவர்கள் வாலிபர்கள் எனப்பலரும் மிக்க ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். என்பது மகிழ்வான செய்தியாகும். பெரிதளவு முரண்பாடுகள் எதுவும் எழுந்ததில்லை.

நாங்கள் 18, 19 வயதினராய் இருந்த போது எமது நிலையத்தினை மீளவும் கட்டி முடித்தோம் என்று பெருமைப்பட்டாலும். உண்மையில் இச் சனசமூக நிலையத்தினை அன்றைய காலத்திலிருந்த மூத்த சகோதரர்களும், பெரியோர்களுமே ஆரம்பித்து வைத்தார்கள். அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட நிலையம் (ஜெகஜோதி சனசமூக நிலையம்) சொந்தமாகக் காணி இல்லாத காரணத்தாலேயே இடைநடுவில் கைவிடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. எமது மூத்த உறுப்பினர்கள், மற்றும் முன்னோர்களின் முயற்சியைப் பாராட்ட வேண்டும். இவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சனசமூக நிலையம் எம்மைப் போன்ற சில இளைஞர்களால் முன்னெடுக்கப்படாது விட்டிருந்தால் ஒரு சனசமூக நிலையம் எமது ஊரில் இருந்திருக்குமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59ம் ஆண்டு நிறைவு விழா
# நிகழ்வுகளில் சில






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59ம் ஆண்டு நிறைவு விழா
# நிகழ்வுகளில் சில





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59ம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகளில் சில





உடுவில் தமிழ் ஒளி சனசமூக நிலையத்தின் 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மெய்வல்லுநர் போட்டியும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந் நிகழ்வில் வெற்றிபெற்ற அணிக்கு பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வெற்றிக் கேடயம் வழங்கிவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59ம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகளில் சில





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59ம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகளில் சில






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59ம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகளில் சில






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது எங்கட்குப் பின்வந்த இளைஞர்கள் இதனைவிடச் சிறப்பாக ஒரு நிலையத்தினை இதனைவிட மேலானதாய் பெரியதொரு காணியினை கொள்வனவு செய்து உருவாக்கியிருப்பார்களா அல்லது உருவாக்காது கைவிட்டிருப் பார்களா என்பதனை ஊகிக்க முடியாதிருக்கிறது. எனினும் ஒரு சிறு துண்டுக் காணியென்றாலும். அன்றைய காலத்தில் காணிச் சொந்தக்காரர் (பொன்னர் தம்பு) அவர்கள் காணியினைத் தந்திருக்கா திருந்தால். அயல் கிராமங்களில் ஒரு சன சமூக நிலையத்தினைக் காண முடியாதிருக்கிறதோ. அதே நிலை எமது கிராமத்திலும் சில சமயம் ஏற்பட்டிருக்கலாம். 1960 ம் வருடம் தற்காலிகமாய் கொடுக்கப்பட்ட காணி சனசமூக நிலைய நன்மை கருதி பன்னிரண்டு (12) வருடங்களின் பின்னரே ஒரு சிறிய தொகைப்பணத்திற்கு விலையாக நிலையத்திற்கு சொந்தமாக கையளிகப்பட்டது.

1960 - 1970 காலங்களில் சன சமூக நிலையம் உருவாக்கப்பட்டு வளர்ந்து கொண்டிருந்த காலங்களில் ஒரு சிலரால் அவ்வப்போது குழப்பங்கள் அமைதியின்மை போன்ற செயற்பாடுகளும் நடை பெற்றுக் கொண்டேயிருந்தது. இதனால் ஒரு சில பெற்றோர்கள் தமது பிள்ளைகள் சனசமூக நிலைய செயற்பாடுகளில் ஈடுபடுவதனை மட்டுப்படுத்தியிருந்தனர். இதற்கான காரணம் சனசமூக நிலையங் களில் ஏற்படும் முரண்பாடுகள் முடிவில் மனக்கசப்பில் முடிவடையக் கூடிய சந்தர்ப்பங்கள் நடந்தமையாகும். இதனால் அவ்வப்போது பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தாலும். அதனையும் பொருட்படுத்தாமல் நிலைய மக்கள் அதனையும் முறியடித்து. பயமின்றி சனசமூக நிலையத்தை வளர்ச்சியினை நோக்கி முன்னெடுத்தனர். இத்தகைய குளப்பங்கள். தடைகள் இல்லாதிருந்தால் சனசமூக நிலையம் இன்னும் பல மைல்க் கற்களைத் தாண்டியிருக்கலாம். யாழ் மாவட்டத் தில் பிரபலமான சனசமூக நிலையங்களில் ஒன்றாக எமது சிறிலங்கா சனசமூக நிலையமும் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

எமது சிறிலங்கா சனசமூக நிலையம் சாதாரணமாக ஆரம்பிக்கப் பட்டாலும் படிப்படியாக வளர்ச்சியடைந்தவண்ணமே சென்று கொண்டிருந்தது. அன்றைய காலங்களில் "தாச்சி. (கிளித்தட்டு மறித்தல்)" விளையாட்டு. கரப்பந்தாட்டம் முன்னணி விளையாட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக இருந்தது. எமது இளைஞர்கள் வேறு சனசமூக நிலையங்க ளுடன் போட்டியில் கலந்து பல வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள். எமக்குச் சொந்தமாக அன்று விளையாட்டு மைதானம் எதுவும் கிடையாது. எமது சிறீலங்கா வீதியின் வடபுற எல்லையில் முளகி என்ற ஒரு காணி இருந்தது.

அந்த இடத்தினை விளையாட்டு மைதானமாக பயன்படுத்திக் கொண்டோம். பின் நாட்களில் திரு. கந்தையா மாசிலாமணி அவர்கள் தற்போது குடியிருக்கும் காணி எமக்கு Volley Ball விளையாட்டு மைதானமாய்ப் பயன்பட்டது. அந்தக் காணியில் வீடு கட்டத் தொடங்கியதும் வேறு இடம் கிடைக்கவில்லை. இந்த நிலையில் எமக்கென்று ஒரு விளையாட்டு மைதானம் கிடைக்காத காரணத்தால், விளையாட்டுப் போட்டிகள் என்பது தொடர்ச்சியாக பெரிதாக களைகட்டவில்லை. எமது கிராமத்தின் வட எல்லைப்பகுதி வயல் சார்ந்ததாய் இருந்தது. நெல் அறுவடை செய்யப்பட்ட பின்னர், அடுத்த போகம் நெற்செய்கை தொடங்கும்வரை கால்பந்து விளையாட்டு மைதானமாகப் பயன்பட்டது.

இது தவிர தற்போது விளையாட்டுமைதானமாய்ப் பயன்படுத்தப் படும் பெரிய காணி எமது சனசமூக நிலையத் தேவைகட்கு அவ்வப் போது பயன்படுத்தப்பட்டு வந்தது. குறிப்பாக ஆண்டு விழா, விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்வுகள் இந்த மைதான வளவிலேயே நடைபெற்று வந்தது. அதற்கு முன்னர் வாசிக சாலைக்கு அருகிலுள்ள வளவிலும் மற்றும் அப்புச்சி மகேந்திரம் ஆகியோர் குடியிருக்கும் காளி அம்மன் கோயிலுக்கு அருகாமையி லுள்ள காணிகளில் நடைபெற்று வந்தது. அந்தக் காணிகள் விலைப்பட்ட பின்னர் வெள்ளையா வளவு என்றழைக்கப்படும். தற்போதைய விளையாட்டு மைதானமே பயன்படுத்தப்பட்டது. ஆனால் இந்தக்காணி தற்போது சனசமூக நிலையத்திற்கு சொந்தமாய்க் கிடைத்துள்ளது. இந்தக் காணியை பெற்றமைக்கு சனசமூக நிர்வாகிகளைப் பாராட்டவேண்டும். இன்று அவ்விளை யாட்டு மைதானத்திற்கு அடையாளமாக “தமிழ் ஒளி விளையாட்டு மைதானம்”, சிறிலங்கா வீதி, உடுவில் எனப் பெயர்ப்பலகையும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள், யுவதிகள் ஏனையோர் தொடர்பாக

எமது நிலையத்தில் ஆண்டு விழா மற்றும் விஷேச கொண்டாட்டங்களில் பெண்கள், யுவதிகளின் சேவை அளப்பரியதாய் காணப்பட்டது. ஆண்டு விழாவின் போது சிறுவர்கள் பங்குபற்றும் விளையாட்டு நிகழ்வுகளை அநேகமாய் யுவதிகள் இளம் பெண்கள் தாமாக முன்வந்து நடத்துவர். இல்லங்கட்கிடையில் நடைபெறும் போட்டிகளின் போது இல்லங்கட்டுப் பொறுப்பாக பெண்களே செயற்படுவர். அது இல்லங்களை அழகாக அலங்கரிப்பதுடன், இல்லத்தைச் சார்ந்த சிறுவர்களையும் பொறுப்புடன் நின்று வழிநடத்துவர். அதுமட்டுமன்றி பெண்களுக்குரியதான சங்கீதக் கதிரை, தேங்காய் துருவுதல்போட்டி, கயிறு இழுத்தல் போன்றபல நிகழ்வுகளிலும் பங்குபற்றுவர். இதுதவிர விருந்தினர்கள் மற்றும் விசேடமாய் அழைக்கப்பட்டவர்களையும் அவர்களே முன்னின்று வரவேற்பதுடன் குளிப்பானம் மற்றும் சிற்றுண்டிகள் பரிமாறுதல் போன்ற பொறுப்பான கடமைகளையும் முன்னின்று செய்வர். இம்முறை (2019) இல் நடந்து முடிந்த ஆண்டு விழாவின் போது ஜனதா காந்தன், சர்மிஜா டினேசன், நிரஞ்சனா சுதர்சன், லக்சாயினி தேவராஜா (வவி) சந்திரகுமார் ஜான்சியா பிரகாஸ், ரூபி (குணவதி) சிவகுமார் இப்பட்டிப் பலரைக் குறிப்பிடலாம். அதேநேரம் எமது விளையாட்டுப் போட்டியின் போது ஆங்கில மொழியில் அறிவிப்புக்களைச் செய்து பிரமிக்கவைத்த சர்மிஜா டினேசன் அவர்கட்கு எமது பாராட்டுகள். அதேபோல் இளைஞர்களில் கந்தையா ரஞ்சித் எட்வின் அவர்கட்கும் எமது பாராட்டுகள். இவர்களின் ஆங்கில அறிவிப்புக்களைக் கவனிக்கும் போது எமது இளைஞர்கள் எப்படித்தம்மை மொழி இயல் மற்றும் தலைமைத்துவப் பண்புகள் நிறைந்தவர்கள் என்பதனை வெளிச்சம் போட்டுக்காட்டியிருப்பதனை அவதானிக்கலாம். இதுபோல எமது நிலையத்தில் இப்பெயர்கள் குறிப்பிடப்பட்டவர்கள் மட்டுமல்ல இவர்களைப் போல் பலர் செயற்படுவதனை அவதானிக்கலாம். எனவே இளைஞர் கூட்டம் தலைமை தாங்கும் புதிய கலாச்சாரத்தை வரவேற்பது ஒரு ஆரோக்கியமான செயற்பாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி சேகரிப்பும், கரோல் நிகழ்வுகளும்.
# For Fund raising Through Carol

எமது கிராமத்து மக்கள் இன்றைய காலத்தில் வாழும் வசதிகள் அன்றைய காலங்களில் எங்களுக்கு இருந்ததில்லை. அன்றாட வாழ்வினை நடாத்திக் கொண்டிருந்த மக்களுக்கு மேலதிகமாய் செலவு செய்வது மிகவும் முடியாத காரியமாயிருந்தது. இதனால் சனசமூக நிலையத் தேவைக்கான பணத்தினை பெற்றுக் கொள்வதற்கு வேறு வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதற்காக சனசமூக நிலையத்தினராகிய நாம் மார்கழி மாதம் நிகழும் "கரோல் கீத" நிகழ்வுகளை (CAROL) இதற்காகப் பயன்படுத்தி னோம். கிறிஸ்மஸ் காலங்களில் நாம் சிறிஸ்தவப் பாடல்களைப் பாடி வீடுகளைத் தரிசித்து நிதிகள் சேகரிப்போம். இரவு ஆரம்பித்து, நள்ளிரவு, அதிகாலை வரை வீடுகளைத் தரிசிப்போம். அனேகமாய் எல்லோரும் இக் கரோல் நிகழ்வுகளில் பங்கு பற்றி நிலையத்திற்குப் பணம் சேகரிக்க உதவி புரிந்தனர். இதற்காக அன்று பங்குபற்றியவர் களின் பெயர்களை இதன் கீழ்த்தருகிறோம். இந்த பெயர் விபரங்களை எமக்கு எழுதித்தந்து உதவிய திரு அ.கமலநாதன் (மகேந்திரம்) அவர்கட்கு எமது நன்றிகள் .

**CHRISTMAS CAROL**
**நிகழ்வில் பங்குபற்றியோர் விபரம்:**

01. அ.நாகரட்ணம் (நாகையா)
02. ஐ.தவயோகராசா
03. த.பாலசுப்பிரமணியம்
04. பொ.சண்முகம்
05. அ.கமல்நாதன்
06. த.மகாதேவா (சின்னக்கிளி)
07. வீ.இராசதுரை
08. தம்பிஜயா இராசரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. தம்பிஐயா இராசலிங்கம் (செல்வா)

10. பொ.கிருஷ்ணபிள்ளை (கிட்டுனு)

11. க.மாசிலாமணி

12. செல்லக்கண்டு

13. சீனியண்ணை

14. வே.நடேசு

15. லாசரஸ் இராசப்பு

16. மா.இராசேந்திரம் (கனி)

17. செ.இரத்தினம் (ஓவியம்)

18. கணபதி (புலவர் அப்பா)

19. அப்பச்சி அண்ணர்

20. செல்லர் இரத்தினம் (ஓவியம்)

21. செல்லர் ஐயாத்துரை

இன்றும் வேறு சில அன்பர்களும் இக்கரோல் கீத நிகழ்வில் பங்கு பற்றியிருக்கக்கூடும். நினைவில் தெரிந்தவர்களையே மேலே குறிப்பிட்டிருக்கிறேன் - விஷேசமாக கரரோல் நிக்ழ்விற்கு எமக்கு வீணைப் பெட்டியைத் தந்துதவிய HARMONIAM அமரர் ஐயம்பிள்ளை அவர்களுக்கும் எமது நன்றிகள். இதுதவிர எமது கரோல் நிகழ்வுகளுக்கான பயிற்சிகள் சின்னத்தம்பி திரவியம் அண்ணர் அவர்களின் வீட்டு முற்றத்தில் நடைபெற்றது. இன்றும் ஞாபகம் அவர்களின் வீடு பெரிதாக இருந்தமையால் எமக்கு வசதியாக இருந்தது. அந்தக் காலத்தில் அவர்களின் வீட்டில் கிராமபோன் Grama Phone பாட்டுப் பெட்டியும் இருந்தது.

அதன் காரணத்தால் நாங்கள் சிறுவர்களாய் இருந்த போது, சினிமா பாட்டுச்சத்தம் கேட்டதும் திரவியம் அண்ணர் வீட்டிற்குப் போய் குதூகலிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண வரவுக் கொண்டாட்டம்

சனசமூக நிலையத்தின் காணியினைச் சொந்தமாகக் கொள்வனவு செய்ய வேண்டுமென்ற எண்ணம் நிலையத்தைச் சார்ந்தவர்கட்கு ஏற்பட்டது. இதற்காக அந்நாளில் சமூகத்தில் வழக்கத் திலிருந்த, ஒரு பணவரவுக் கொண்டாட்டத்தை நிலையத்தில் நடாத்த முடிவு செய்யப்பட்டது. இதன்படி நிலையத்திற்கு ரூபாய் 15/= வீதம் ஒவ்வொரு குடும்பத்தினரும் அன்பளிப்பு செய்தனர். வருகை தந்தவர்கட்குத் தேநீரும், பிஸ்கட்டும் (SHORT EATS) ஆக வழங்கப்பட்டது. காணி வாங்குவதற்குத் தேவையான பணம் சேர்ந்து விட்டது. காணிக்கு உரியவரும் காணியினை சனசமூக நிலையத்திற்குச் சொந்தமாக எழுதிக்கொடுத்தார். அந்தக் காணியினை விற்க வேண்டிய பொருளாதார நிலைமை இல்லாதிருந்த போதிலும், பொதுத் தேவைக்கு காணியினை விற்பனை செய்த காலம்சென்ற பொன்னர் தம்பு அவர்கட்கும் கணபதி கிட்டிணர் அவர்கட்கும் நன்றிகள் உரித்தாகட்டும். சனசமூக நிலையத்திற்கான காணிப் பிரச்சனையும் ஒரு நல்ல முடிவுக்கு வந்துவிட்டது. உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. V.தர்மலிங்கம் அவர்கள் பணவரவுக் கொண்டாட்டத்திற்கு ரூபா 500/= அன்பளிப்பு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது புதிய வதிவிடம் - 1971

நான் 1971ம் வருடம் திருமணமாகி, சுண்டுக்குளி என்னும் கிராமத்தில் குடியிருக்கத் தொடங்கினேன். சுண்டுக்குளியில் குடியிருந்த போதும் அடிக்கடி எனது பிறந்த ஊருக்கு வருகை தந்த வண்ணமே இருந்தேன். அநேகமாய் சனசமூக நிலையத்தில் நடைபெறும் விசேட நிகழ்வுகளில் நான் தவறாது வருகைதந்து, எனது பங்களிப்பினை வழங்கி வந்தேன். பல நிகழ்ச்சிகளை நானே முன்னின்று நடாத்தி வந்தேன். இது எனக்கு மகிழ்ச்சியும், எனது கடமையுமாகவும் இருந்தது. எனது தலைமைக்குப் பின்னர் இன்று வரை (2020) பல தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று வரை சிறப்பாக செயலாற்றி வருகிறார்கள். நான் பல வருடங்களாய் சுண்டுக்குளி என்னும் கிராமத்தில் நிரந்தரமாய் குடியிருப்பதால் 1972ம் வருடத்தின் பின்னைய காலத்தின் வரலாற்றினை, தற்போதைய நிர்வாகத்திலுள்ள நிர்வாகசபையினர் மிகத் தெளிவாக வும் சிறப்பாகவும் பதிவு செய்வார்களென நம்புகிறேன். இருந்த போதிலும் எனக்குத் தெரிந்த ஒரு சில தகவல்களை இங்கு தருகிறேன். அத்துடன் எனது அறிவுக்கெட்டியவரை எனக்குத் தெரிந்த தலைவர்களைப்பற்றி சிறுகுறிப்புகள் தருகிறேன். சில தலைவர்களின் பெயர்கள் தவறுதலாய் இடம் பெறாமலும் இருக்கலாம். அதற்காக மனம் வருந்துகிறேன். புதிய நிர்வாகத்தினர் இக்குறைபாட்டினை நீக்கி, பிற்காலத்தையே வரலாற்றினை பதிவு செய்வார்களென எண்ணுகிறேன். சுமார் 60 ஆண்டுகளின் வரலாற்றினை எழுதுவதென்பது மிகவும் ஒரு கஸ்டமான செயலாக எனக்குத் தென்படுகிறது. ஒரு சிறியதொரு கொட்டில் அதன் பின்னர் சீமெந்துக் கட்டடமாக இருந்த சனசமூக நிலையம் மாடிக்கட்டமாக பரிணாம வளர்ச்சியடைய தொடங்கியது. இதற்குள் அநேக மாற்றங்கள் நடந்தேறி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சிறிலகா சனசமூக நிலையம்" என்ற வரலாற்றுப் பெயரினை "தமிழ் ஒளி சன சமூக நிலையம்" என பெயர் மாற்றம் செய்தமை.

எமது சனசமூக நிலையம் 1960 ம் வருடம் ஸ்தாபிக்கப்பட்டது. இந் நிலையத்திற்கு சிறிலங்கா சனசமூக நிலையம் எனப் பெயர் சூட்டப்பட்டது. இப்பெயர் 1960 ம் வருடம் நிலையத்தில் நடைபெற்ற முதாவது பொதுக்கூட்டத்தில் இப் பெயர் தெரிவு செய்யப்பட்டு, அக்கூட்டத்தில் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டது.

தமிழர்கள் மத்தியில் அக்காலத்தில் சாதி வேறுபாடுகள் சமூக ஒடுக்கு முறைகள், வர்க்க பேதங்கள் நிலவிய ஒரு காலம் அது. இவ் ஒடுக்கு முறைக்குள் எமது சமூகமும் சிக்கி தவித்துக் கொண்டிருந் தமை துன்பகரமான நிகழ்வாகும்.

1956 ம் வருடம் இலங்கை அரசியலில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்ற ஒரு கட்சி பாராளுமன்றத்தில் ஆட்சியமைத்தது. இதன் விளைவாக சமூக ஒடுக்கு முறைகட்கு எதிரான சட்டங்கள் உருவாக்கப்பட்டு, தமிழர்கள் மத்தியில் நிலவிய ஒடுக்குமுறைகட்கு ஓரளவு நிவாரணம் எட்டப்பட்டது என்பது உண்மையாகும். இதன் காரணமாக பாடசாலைகள், ஆலயங்கள், உணவகங்கள், பொதுப் போக்குவரத்து போன்றவற்றில் நிலவிய வேறுபாடுகள் குறைவடைந்து சமத்துவ நிலைகள் ஏற்படத் தொடங்கியது. இதனால் எமது கிராமத்து மக்களும் இவ்வகையான நன்மைகளை அனுபவிக்கத் தொடங்கினர், இன்னோரன்ன நன்மைகள் கிடைக்கப்பெற்ற காரணத்தாலேயே அன்று நிலையம் ஸ்தாபிக்கப்பட்டபோது சிறிலங்கா சனசமூக நிலையம் என்ற இப்பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டது. இப் பெயருக்கு ஒரு காரணம் இருந்தது.

இது ஒருபுறமிருக்க இலங்கையில் வாழும் இரு மொழிகள் பேசும் மக்களிடையே, மொழி சம்பந்தமான் முரண்பாடுகள் இன வேறு பாடுகள் ஏற்பட்டு, ஈற்றில் ஆயுதப் போராக பரிணமித்தது.

1990 ம் ஆண்டு இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஆயுதப்போராட்டம் நடைபெற்றது. எமது தேசம் அநேகமாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததென்பது உண்மையாகும். இதன் காரணமாய் போராளிகள் மட்டத்தில் 1991 ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டளவில் ஸ்ரீலங்கா சனசமூக நிலையம் எனும் பெயரை மாற்றும்படி அழுத்தம் கொடுத்தனர். அந்நேரம் வேறுவழி ஏதுமின்றி பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டிய நிர்ப்பந்தம் சனசமூக நிலைய நிர்வாகத்தினருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாய் "ஸ்ரீலங்கா சனசமூக நிலையம்" என்ற பெயரை அகற்றிவிட்டு "தமிழ்ஒளி சனசமூக நிலையம்" என்ற பெயர் அடையாளப்படுத்தப்பட்டது. இது யுத்த காலத்தின் நெருக்கடியில் சூட்டப்பட்ட பெயராகும். ஒரு வரலாறுப் பெயரினை மாற்றுவதென்பது கவலைக் குரியதாகும். ஏற்றுக்கொள்ள முடியாததுமாகும் என்பது பொதுவான கருந்து.

## புதிய மாடிக் கட்டடம்:

எமது சனசமூக நிலையம் சிறிய கட்டடமாக இருந்த போதிலும், ஒரு பெரிய கட்டடமாக கட்ட வேண்டுமென்ற ஒரு விருப்பம் அனைவரது மனத்திலும் இருந்தது. சிறிய காணியாக இருந்த காரணத்தால் அனைவரும் ஒரு வைபவத்தின் போது ஒன்றுகூடுவது என்பது இட நெருக்கடியாய் இருந்தது. அதேநேரம் மாடிக்கட்டடம் கட்டுவதற்கும் பல இலட்ச ரூபாய்கள் தேவைப்பட்டது. இதற்குமுன் திரு.இளையவர் மாணிக்கம். ஆசீர்வாதம் அருள்நேசராசா போன்றோரின் முயற்சியி னால் ஒரு சிறிய கட்டிடம் நிலையத்திற்கு முன்னால் கட்டி முடிக்கப் பட்டிருந்த போதும் அக்கட்டடமானது போதிய வசதியின்றி இடைஞ்ச லாகவும், பார்வைக்கு அழகு குறைவாகவும் காணப்பட்டது.

கடந்த ஆட்சிக்கு முன்னைய ஆட்சிக் காலத்தில் (2010-2015). மாண்புமிகு ஜனாதிபதியாக கௌரவ மகிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்தபோது கிராமத்துக்குப் பத்து இலட்சம் ரூபா நிதி பொதுப் பயன் பாட்டிற்கான நிதியாக கிராமங்கட்கு ஒதுக்கப்பட்டது. 2015 ம் வருடம் ஆட்சி மாற்றம் காரணமாய் ஐ.தே.கட்சியினைச் சோந்த - மாண்பு மிகு இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர் களின் நிதி ஒதுக்கீட்டில் எமது சனசமூக நிலையத்திற்கு ரூபா பத்து இலட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரின் இணைப்பாளராய் செயற்பட்ட திரு ரமணன் (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) அவர்களை எமது கிராமத்தில் வதிபரும், முன்னாள் நிலையத் தலைவரும், சண்டிலிப்பாய் பிரதேச செயல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தில் நிதி உதவியாளராய் பணியாற்றிய வருமான திரு. கிருஷ்ணர் ராஜேஸ்வரன் (ரவி) அயராது பாடுபட்டு இந்நிதியினைப் பெறுவதற்கு காரணமாயிருந்தார். இந்நேரம் நிலையத்தின் தலைவராய் செயற்பட்ட திரு. மா. பன்னீர்செல்வம் அவர்களும் அவரோடு உழைத்த நிலைய நிர்வாகிகளும் இந்நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு அக்கறை யுடன் உழைத்தனர்.

இந்நிதி கிடைக்க பெற்றதும் சிறிய கட்டடமாயிருந்த எமது சனசமூக நிலையம் மாடிக்கட்டடமாகத் தோற்றம் பெற்றது. 28.06.2018 ம் திகதி வைபவ ரீதியாய் மாடிக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

## சன சமூக நிலையத்திற்கான கொடி!

"ஜெகஜோதி" சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்ட போது, ஆசிரியர் திரு.வ.பொன்னம்பலம் அவர்களின் செல்வாக்கு கிராமத்தில் ஒரு விழிப்புணர்சியை ஏற்படுத்தியிருந்தது. இவர் ஒரு பொது உடைமைக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தமையால் (Communist Party) இவரது செல்வாக்கு சிறிலங்கா வாசிகசாலையிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. இதனால் எமது சனசமூக நிலையக் கொடி சிவப்பு நிறமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது. பல வருடங்களாக இக் கொடியானது, சனசமூக நிலையத்தின் ஒவ்வொரு நிகழ்வின் போதும், கம்பத்தில் பறக்க விடப்படும்.

## சமய விழாக்கள் :-

எமது கிராமம் இந்துக்களைப் பெரும்பான்மையைக் கொண்ட கிராமமாக இருந்தது. இதன் காரணமாய் தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி, நவராத்திரி, கார்த்திகை விளக்கீடு போன்ற பிரதான தினங்களில் ஒரு சில நிகழ்வுகள் நடைபெறுவதுண்டு. நிலையத்தின் ஆரம்ப காலத்தில் என்ற காரணத் தால் நிகழ்வுகளும் சாதாரணமாகவே நடைபெற்று வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகத்தில் நடைபெறும் நிகழ்வுகள் :-**

ஊருக்குள் நடைபெறும் திருமணத்தின் போது, வாழ்த்துப்பா போன்றன கைளிக்கப்படும். திருமணத் தம்பதிகள் ஊர்வலமாக நிலையத்தின் முன்னால் வரவேற்கப்பட்டு நிறைகுடம் குத்துவிளக்கு சகிதம் வைக்கப்பட்டு மாலைகள் அணிவித்து கௌரவிக்கப்பட்டு, ஆசி வழுங்கப்படும். சனசமூக நிர்வாகிகள் ஒன்றுகூடி இதனைச் சிறப்பாகச் செய்வர். இது மக்களிடம் பெரும் நன்மதிப்பைப் பெற்றன.

இதுபோலவே அமங்கல நிகழ்வுகள் காலத்தில் நிலையத்தின் அனுதாபத்தினை வெளிப்படுத்துவர். அத்தகைய தினங்களில் நிலையம் இழுத்து மூடப்பட்டிருக்கும். இதுதவிர கண்ணீர் அஞ்சலித் துண்டுப் பிரசுரம் மற்றும் மலர் வளையம் கொடுத்தும் நிலையத்தி னரது துயரத்தினை வெளிப்படுத்துவர். இந்நிகழ்வுகள் அனைத்தும் இன்று வரையும் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகிறது.

**எமது சன சமூக நிலையத்தில் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு சேவை செய்தவர்களும் மற்றும் முக்கியஸ்தர்களும்:**

எமது சனசமூக நிலையம் "ஸ்ரீ லங்கா சனசமூக நிலையம்" என்னும் பெயரில் 1960 ல் ஸ்தாபிக்கப்பட்டது. சுமார் முப்பது (30) வருடங்களின் பின்னர் இந்நிலையத்திற்கு "தமிழ் ஒளி சனசமூக நிலையம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இன்று வரை இந்நிலையத்திற்குப் பல தலைவர்கள் சேவை செய்து நிலையத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். இது போலவே இன்னும் பல முக்கியஸ்தர் களும் சேவை செய்துள்ளார்கள். எனது அறிவுக்கு எட்டியவரை இவர்களின் பெயர்களையும் அவர்களின் சேவைகள் பற்றிய சில குறிப்புகளையும் தருகிறேன். இதில் பெயர்கள் தவறுதலாய்விடப்பட்டி ருந்தால் அதற்காக மனம் வருந்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெயர்கள் பின்வருமாறு:**

01. தம்பு பாலசுப்பிரமணியம் -
    (நிலையத்தின் முதவாவது தலைவர்- 1960)
02. பொன்னுத்துரை சண்முகம்
03. அப்புப்பிள்ளை (நாகரட்ணம் நாகையா)
04. ஐயம்பிள்ளை தவயோகராசா
05. விமர் இராசதுரை
06. பொன்னர் தெய்வேந்திரம்
07. வல்லிபுரம் தேவராசா (வவி)
08. இளையவர் மாணிக்கம்
09. கிருஷ்ணர் இராஜேஸ்வரன் (ரவி)
10. தம்பிப்பிள்ளை தேவராஜன்
11. ஆசீர்வாதம் (சின்னராசா) அருள்நேசராசா
12. சின்னப்பு நல்லையா
13. செல்லர் முருகேசு
14. மார்க்கண்டு அருள்நேசராசா
15. கந்தசாமி நாகேஸ்வரன் (ரவி)
16. சூசைப்பிள்ளை எட்வேட் றெஜினோல்ட்
17. மாணிக்கம் மகாலிங்கம் (இராசகிளி)
18. செல்லர் இரத்தினம் (ஓவியம்)
19. மார்க்கண்டு பன்னீர்செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. தம்பு பாலசுப்பிரமணியம் (முதலாவது தலைவர் -1960)

இவ்வரலாற்றினை எழுதும் தம்பு பாலசுப்பிரமணியம் ஆகிய நான் உடுவில் சிறிலங்கா வீதியினைப் பிறப்பிடமாகவும், திருமணத்தின் பின் சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்டவராவேன், நானும் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தேன். எனது தகப்பனாரும் ஒரு அன்றாடம் உழைக்கும் தொழிலாழி. நான் எனது ஆரம்பக் கல்விதனை உடுவில் Hely Rosary R.C School லும் இடைநிலைக் கல்விதனை வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரியிலும், உயர் கல்வியினை சுன்னாகம் SKANDA VARODAYA COLLEGE லும் பெற்றுக் கொண்டேன். ஐந்தாம் ஆண்டில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த காரணத்தால், வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரியில் சேரந்து, விடுதியில் (HOSTEL) தங்கி கல்வி கற்றேன். எமது கிராமத்தில் Scholarship பரீட்சையில் முதன் முதலாக சித்தியடைந்த மகிழ்ச்சி எனக்கு உண்டு. இலங்கை போக்குவரத்துச் சபையில் (CTB) நிர்வாக உத்தியோகத்தராய் பணிசெய்து ஓய்வு நிலையிலுள்ளேன். யாழ்ப்பாணம் YMCA நிறுவனத்தில் உப தலைவராகவும் எமது 'Church of Ceylon' சபையால் வெளியிடப்படும் "தெளிவு" எனும் மாதாந்தப் பத்திரிகையில் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் தொண்ட ராகவும் பணி புரிகிறேன். சனசமூக நிலையம் ஸ்தாபித்த போது (1960) அதன் முதல் தலைவராக தெரிவு செய்யப்பட்டு இன்று வரை சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறேன். தொடந்தும் நிலையத்தில் ஒரு அங்கத்தவராய் இருக்கிறேன்.

### திரு. அப்புப்பிள்ளை நாகரத்தினம் (நாகையா)

இவர் உடுவில் சிறிலங்கா வீதியினை சேர்ந்தவர். திருமணத்தின் பின்னர் சண்டிலிப்பாய் என்றும் கிராமத்தினை வதிவிடமாக கொண்டவர். சிறிலங்கா சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்படுவதற் கான செயற்பாடுகளில் ஈடுபட்ட முதன்மை மாணவர்களில் இவரும் ஒருவராவார். சனசமூக நிலையத்தின் முதலாவது செயலாளராய் செயற்பட்டவர். உடுவில் MANNS ENGLISH SCHOOL ல், SSC வரை கல்வி பயின்றவர். அக் காலத்தில் பல மாணவர்கள் SSC பரீட்சையில் சித்தியடைவதக்கு அக்கறையுடன் செயற்பட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுத் துறையில் சிறந்த கரபந்தாட்ட Volley Ball வீரர் பாரம்பரிய விளையாட்டான "தாச்சி" விளையாட்டிலும் வல்லவர். இ.போ சபையில் (CTB) ஊழியராய்ப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கடின உழைப்பாளி சிறந்த சமூக சேவையாளர். இவர் அமரராகிவிட்டார் என்பது கவலைக்குரிய செய்தியாகும்.

### திரு. பொன்னுத்துரை சண்முகம்

இவர் சிறிலங்கா சனசமூக நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினர், சனசமூக நிலையம் ஓலைக் கொட்டகையாயிருந்த போது, இதனை கல்லினால் கட்ட எடுத்த முயற்சியின் போது, இவர் கட்டிடக்கட்டுமான வேலைகளில் அக்கறையுடன் செயற்பட்டார். எந்த நேரமும் சனசமூக நிலையத்தின் தேவைகளையே கவனித்து வந்தார்.

விடுமுறை தினங்களிலும், தனது வேலை முடிந்த மாலை நேரங்களிலும், சன சமூக நிலையத்தில் செய்ய வேண்டிய கட்டிடம் சம்மந்தமான வேலைகளைச் செய்து கொண்டேயிருப்பார். அந்தள வுக்கு சனசமூக நிலையத்தில் பற்று வைத்து நடந்தார். இதை இக்கிராம மக்கள் நன்கறிவர். திருமணத்தின் நிமித்தம் தற்போது திருநெல்வேலியினை வசிப்பிடமாய் கொண்டிருக்கிறார். வயதான காரணத்தால் இன்று அவரை உடுவிலில் காண்பது மிகவும் அரிது. சனசமூக நிலையத்தில் ஒரு தூண்போன்று ஒரு கனமான பங்களிபினை தனது வாழ்நாளில் செய்திருந்தார்.

### திரு. ஐயம்பிள்ளை தவயோகராசா

இவர் சிறிலங்கா வீதியினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர், உடுவில் MANAS ENGLISH SCHOOL இல் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்றவர். அதன் பின்னர் சன்னாகம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரியில் மாணவனாய் சேர்ந்து S.S.C பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். மாணவராய் இருக்கும் போது பொது விடயங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். சிறிலங்கா சனசமூக நிலையம் ஸ்தாபிதமாவதற்கு முன்னின்று செயற்பட்ட மாணவர் களில் இவருக்கும் காத்திரமான ஈடுபாடு இருந்தது. சிறிலங்கா சனசமூக நிலையத்தின் முதலாவது பொருளாளருமாய் தேர்ந்தெடுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டு சிறப்பாக சேவை செய்தவர். இவர்நிமித்தம் இவரது குடும்பத்தினரும் சனசமூக நிலைய செயற்பாடுகட்குப் பக்கபலமாய் விளங்கினர். இவர் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் (CTB) இல் ஒரு ஊழியராய் கடமையாற்றி ஒய்வு நிலையிலுள்ளார். சிறந்த கரப்பந்தாட்ட வீரராகவும், தாச்சி விளையாட்டில் வல்லவராகவும் விளங்கினார். எமது கிராமத்துக்கு பல சேவைகள் செய்துள்ளார்.

## திரு.வீமர் இராசதுரை

இவர் இளமைக் காலம் தொடக்கம் சனசமூக நிலையத்திற்கு பல வழிகளிலும் சேவை செய்துள்ளார். தனது கல்வியினைச் சிறப்பாக மேற்கொண்டார். இதனால் சுகாதாரத்துறையில் நல்ல தொழில் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். இவர் எமது ஊரில் சமாதான நீதவான் என்ற சிறப்புப்பட்டத்தினைப் பெற்று பல சமூக சேவைகளை மேற் கொண்ட பெருமைக்குரியவர். இவர் தற்போது U.K யில் புலம் பெயர்ந்து வசிக்கிறார். இவர் தனது வாரிசுகளை கல்விப்புலத்தில் அதி உன்னத நிலையில் வைத்து, எம் சமூகத்திற்குப் பெருமை தனைத் தேடியுள்ளார்.

இவரைப் போலவே இவரது மூத்த சகோதரர்கள் வீமர் செல்லத்துரை வீமர் சின்னத்துரை அவர்களும் சனசமூக நிலையம் ஆரம்பித்த காலத்திலிருந்து நிலையத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து வந்துள்ளார்கள். இன்று வயதான காலத்திலும் பொதுச் சேவைகளில் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறார்கள். இவர்களும் எமது சிறிலங்கா ஊருக்கு பல சேவைகள் செய்தமை பாராட்டுக்கு உரியது.

## திரு. பொன்னர் தெய்வேந்திரம்

இவர் உடுவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டவர். உடுவில் Holy Rosary R.C.Shool இல் கல்விகற்றவர். இவர் சுயதொழில் மூலம் சமூகத்தில் ஒரு உன்னத நிலையில் உள்ளார். விளையாட்டுத் துறையில் மிகுந்த ஈடுபாடும், அக்கறையும் கொண்டவர். இவர் நிலையத்தின் தலைவராக இருந்த காலத்தில் பல Turanament விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி, நிலையத்திற்குப் பெரும் புகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பாதித்துக் கொடுத்தவர். சனசமூக நிலையத்தின் ஆரம்பகால கட்டடத்தினைச் சுற்றி சீமெந்து மதில் கட்டியமை போன்ற பெரிய சேவை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திரு. கிருஷ்ணர் இராஜேஸ்வரன் (ரவி)

இவர் இக் கிராமத்தினைப் பூர்வீகமாயக் கொண்டவர். இவர் ஆரம்ப காலத்தில் சுகாதாரத் திணைக்களத்தில் பணியாற்றி, அதன் பின்னர் வெவ்வேறு பிரதேச செயலகங்களில் பணியாற்றி, தற்போது வலி - தெற்கு பிரதேச செயலகம் உடுவில் என்ற இடத்தில் Finance Assistant என்னும் உயர் பதவியிலிருக்கிறார். சனசமூக நிலையம் அமைந்துள்ள காணியில் இவரின் தந்தையாருக்கும் காணி உரித்து இருந்தது. அவர் 1960 களில் எவ்வித நிபந்தனைகளுமின்றி காணியில் சனசமூக நிலையம் அமைய உவியாயிருந்தார், கிராமத்துகுப் பத்து இலட்சம் ரூபா என்ற அரசாங்கத்தின் உதவிநிதி என்ற நிதியினைப் பெறுவதற்கு, யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமாகிய கௌரவ விஜயகலா மகேஸ்வரன் அவர்களை அணுகி, இந்நிதியினைப் பெறுவதற்கு அயராது பாடுபட்டு, இப்புதிய மாடிக் கட்டிடத்தினைக்கட்ட இவரும் ஒரு காரணராயிருந்தார். இவரின் நிலையத் தலைமைத்துவத்தின் கீழ் 25ஆம் ஆண்டு விழாவில் பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## திரு.கந்தசாமி நாகேஸ்வரன் (ரவி)

இவர் இளம் வயதில் துடிப்புள்ள ஒரு தலைவராய் செயற்பட்டார். இவர் உடுவிலைப் பிறப்பிடமாகவும், கனடா தேசத்தை வதிவிட மாயும் கொண்டவர். கல்வியில் தேர்ச்சி பெற்றவர் நிலையத்தின் தலைவராயிருந்த காலத்தில் விளையாட்டுப்போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டி போன்ற பல வியப்புறு நிகழ்வுகளை நடாத்தினார். இவரின் நிர்வாக காலத்தில் நிலையத்தின் ஆண்டு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்று வந்தது. அயல் கிராமத்தவர்களும் இந்நிகழ்வு களைக் கண்டுகளிக்க பெருமளவில் திரண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. கனடா தேசத்தில் குடியிருந்த போதும் நிலையத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளில் அவ்வப்போது ஈடுபாடு கொண்டு, உதவிகள் செய்து வருகின்றார்.

### திரு. வல்லிபுரம் தேவராசா (வவி)

இவர் வளம் கொழிக்கும் சண்டிலிப்பாய் என்னும் கிராமத்தினைப் பிறப்பிடமாகவும் திருமணம் காரணமாய் எழில் கொஞ்சும் ஸ்ரீலங்கா வீதியினை வதிவிடமாய்க் கொண்டவர். எமது கிராமத்தினை மிகவும் நேசித்தவர். இதனால் எமது கிராம மக்கள் ஸ்ரீலங்கா சனசமூகத்தின் தலைவராக தேர்ந்தெடுத்தனர். இவர் தலைவராய் சேவை செய்த காலத்தில், நிலையத்தினை மிக உன்னத நிலையில் வழிநடத்தி, நிலையத்திற்குப் பெருமைதனைச் சேர்த்தார். குறிப்பாக இவர் தலைமையில் நடைபெற்ற ஆண்டு விழா நிகழ்வுகள் மிகவும் களைகட்டியதாய், அனைவரையும் கவர்ந்திழுக்கும் நிகழ்வாக இரண்டு மூன்று தினங்கள் குதூகலமாய் இருக்கும். கிராமத்தில் மதிப்புமிக்க ஒரு பிரசையாகத் திகழ்ந்தார். சுயதொழிலில் முன்னேற்றம் கண்டவர். இவரின் சேவை என்றும் நினைவு கூரத்தக்கது.

### திரு. செல்லர் இரத்தினம் (ஓவியம்)

திரு. ஓவியம் அவர்கள் சிறந்த பாடகர் சினிமா வசனங்களை மிக அழகாகப் பேசும் வல்லமை கொண்டவர். கிறிஸ்மஸ் "கரோல்" நிகழ்வுகளில் அயராது பங்குபற்றியுள்ளார். இள வயதிலேயே தனது வாழ்வினை அகால மரணத்துக்குப் பற்றிகொடுத்தமை மிகவும் வேதனையளிக்கிறது. அவரது சேவை என்றும் நினைவிலிருக்கும்.

### இளையவர் மாணிக்கம் (பொறியியலாளர்)

இவர் சுண்ணாகம் என்னும் கிராமத்தினைப் பிறப்பிடமாய்க் கொண்டவர் திருமணத்தின் மூலம் எமது கிராமத்தினை வசிப்பிட மாய்க் கொண்டவர். இவர் ஒரு சிறந்த பொறியியலாளர். இவரது மனைவியும் சுகாதாரத் திணைக்களத்தில் பணிபுரிந்தார். இவர் தலைவராயிருந்த காலத்தில் சனசமூக நிலையத்திற்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பள்ளி நடாத்துவதற்கான கட்டிடத்தினைக் கட்டுவதற்கு முயற்சி செய்து அதில் நிறைவும் கண்டார். இவர் ஆங்கிலத்தில், சிங்களத்தில் மிகவும் புலமை வாய்ந்தவர். இவரின் சேவை பாரட்டுக்குரியது. வாழ்ந்திருந்த காலத்தில் சிறந்த மனிதராய் போற்றப்பட்டார்.

### திரு.ஆசீர்வாதம் (சின்னராசா) அருள்நேசராசா

இவர் உருவில் என்னும் கிராமத்தினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். சிறந்த கல்வியாளர். சிறுவயது முதல் சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்காகச் செயற்பட்டவர். பனை தென்னை அபிவிருத்தி சங்கத்தில் ஒரு உழியராய் இணைந்து, கணக்காளராய் கிளை முகாமையாளராய் தொழிலில் உயர்வினைக் கண்டவர். இதனால் இவரின் பட்டறிவு சனசமூக நிலையத்தில் கணக்கு வழக்கு சமந்தப்பட்ட காரியங்களில் பேருதவியாகவும், வழிகாட்டலாகவும் இருந்தது. இவரின் நிர்வாக காலத்தில் சனசமூக நிலையத்தில் சிறுவர்கட்கான முன்பள்ளிக்கான கட்டடம் ஒன்று நிறுவப்பட்டு, சிறுபிள்ளைகளின் ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்கு உதவியாக விருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் சிறந்தவொரு சமூக சேவையாளராவார்.

### திரு.தம்பிப்பிள்ளை தேவராஜன்

இவர் சிறிலங்கா வீதியினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியினை உடுவில் MANNS English School லும், இடைநிலைக் கல்வியினை சுண்ணாகம் SPANDAVARODAYA College லும் மேற்கொண்டு, அக்கல்லூரியிலிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்று புவியியல் பாடத்தில் சிறப்புத் தேர்ச்சி (B.A.Hons) பெற்றார். எமது கிராமத்திலிருந்து பல்கலைக் கழகத்துக்கு முதன் முதலில் தெரிவு செய்யப்பட்டவர் என்ற பெருமை இவருக்கு உண்டு. அரச சேவையில் இணைந்து உதவித்திட்டப் பணிப்பாளராய் பணிபுரிந்து, ஓய்வு பெறும்போது காரைநகர் உதவி அசாங்க அதிபர் பணிமனையில் AGA ஆக பணிபுரிந்தார். வலி தெற்கு பிரதேச சபையில் ஒரு உறுப்பினராய் சேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் சேவை செய்தார். சனசமூக நிலையத்தின் தலைவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்பட்ட காலத்தில் கல்வி சம்பந்தமாக பல செயற்பாடு களை மேற்கொண்டார். குறிப்பாக "திருக்குறள்" மனனப்போட்டி நடாத்தி தமிழ்மொழி விழிப்புணர்வினை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். பழைய மாணவர் சங்கத்திலும் பல பொறுப்புக்களை ஏற்று நடாத்தியதுடன், LIONS CLUB லும் பாரிய பணிதனை மேற்கொண்டு வந்தார்.

### மார்க்கண்டு. அருள்நேசராசா

இவர் சனசமூக நிலையத்தில் செயலாளராய் சேவை செய்து பல அரும்பெரும் பணிகளை நிலையத்திற்கு அவ்வப்போது செய்து வந்துள்ளார். இவரின் தந்தையார் காலம்சென்ற மார்க்கண்டு அவர்கள் "ஜெகஜோதி சனசமூக நிலையம்" ஆரம்பித்தபோது அதில் பிரதான வகிபாகம் திரு.மார்க்கண்டு அவர்களுக்கு உண்டு. உடுவில் பிரதேச சபையில் ஒரு உத்தியோகஸ்தராகப் பணியாற்றி, ஓய்வு நிலையை அடையப்போகும் சிரேஷ்ட ஊழியவராவார். கடமையின் போது பொதுமக்கட்கு பல தேவைகள் உதவிகள் செய்வது இவரின் விசேட குணாதிசயமாகும். பல வருடங்களாக நிலையத்துடன் தொடர்பு கொண்டவராயுள்ளார். மேலும் அவர் சமூக, பொதுச்சேவைகள் செய்வதனை எதிர்பார்க்கிறோம்.

### திரு சூசைப்பிள்ளை எட்வேட் றெஜினோல்ட்

இவர் உடுவில் சிறிலங்கா விதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறுவயது தொடக்கம் சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டதுடன், பல நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்துமுள்ளார். குறிப்பாக நாடகங்கட்டு கதை, வசனம் எழுதுவதில் கைதேர்ந்ததுடன் பல நாடகங்களில் தானும் நடித்துள்ளார். பல நாடகங்கள் பல இடங்களில் அரங்கேற உதவியாயிருந்து செயற்பட்டார். சனசமூக நிலைய ஆண்டு விழாவின் போது கதை, வசனம் எழுதி தானும் நடித்த "ருக்குமணி கல்யாணம்" என்ற நாடகம் பற்றி இன்றும் பெரியோர்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது. சனசமூக நிலைய இளைஞர்கள், யுவதிகள் இதில் நடித்தமை குறிப்பிடத்தக்கது. சிறந்த கல்வி வளத்தைப் பெற்ற இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SENIOR ASSISTANT REGISTRAR ஆகப் பணிபுரிகிறார். நிலையத்தில் செயலாளர் போன்ற பல பதவிகளைப் பெற்று சேவை செய்வதுடன், நிலையத் தேவைகட்டுப் பல பொருளாதார உதவிகளை அவ்வப்போது செய்து வருகிறார்.

### திரு. வேலர் நடேசு

இவர் இக் கிராமத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் ஒரு சிரேஷ்ட பிரஜையாவார். சிறு வயதிலிருந்தே கடுமையாய் உழைப்பவர். விவசாயம், சுயதொழில் இன்னும் வருமானந்தரும் தொழிலினைச் சிறப்பாகச் செய்பவர். இதனால் பொருளாதாரத்தில் மிகவும் மேம்பட்டு விளங்கினார். இவர் வதியுடன் இருப்பதனால் அவ்வப்போது பணத்தேவையுடை யோருக்கு கைமாற்றாய் அவ்வப்போது உதவும் நல்ல குணமுடைய வராய்த் திகழ்ந்தார். 1970 களில் உள்ளூர் விவசாயப் பொருட்களை அரசு ஊக்குவித்தபொழுது உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களை விளைவித்து கணிசமான வெற்றியும் கண்டார். பொதுப் போக்குவரத்துக்கு அனுமதி கிடைத்தபோது எமது கிராமத்தில் சிற்றூர்தி வாகனம் கொள்வனவு செய்து அதற்கு "குணசீலன்" எனப் பெயரும் சூட்டி, 769 பாதையில் சேவையில் ஈடுபடுத்தினார். எமது கிராமத்தில் முதன் முதலில் தனியார் பஸ் சேவை நடத்திய பெருமை இவரைச்சாரும். 1959ம் வருடம் "ஜெகஜோதி" சனசமூக நிலையம் ஆரம்பித்த நாள் தொடக்கம் இன்று வரை சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளில் ஈடுபட்டு பொருளாதார உதவி. சரீர உதவியென்பவற்றை சளைக்காது செய்து வருகிறார். இவர் நீடிய ஆயுளுடன் வாழப் பிரார்த்திக்கின்றோம்.

### திரு. செல்லர் முருகேசு

இவர் சனசமூக நிலையத்தின் தலைவராக செயற்பட்ட காலத்தில் அவ்வப்போது தேவையான காரியங்களைச் செய்து வந்துள்ளார். இவர்களின் காலத்தில் நாட்டு நிலை காரணமாய் எந்தக் காரியத்தி லும் சிறப்பாகச் செய்து முடிக்க முடியாத இடையூறுகள் காணப்பட்டது. தலைவாயிருந்த கலத்தில் சனசமூக நிலையத்திற்கு நிதி உதவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இவர் சிறந்த கரப்பந்தாட்ட விளையாட்டுவீரர் ஆவார். அக்காலங்களில் சனசமூக நிலையங்களுக்கிடையில் நடைபெற்ற சுற்றுப்போட்டிகளில் எமது ஸ்ரீலங்கா சனசமூக நிலையம் பல வெற்றிகளை சுவீகரித்துக் கொண்டமைக்கு இவருடைய திறமையும் காரணமாய் இருந்தது. அரசியல் விவகாரங்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். 1960 ஆம் வருடம் மாச் மாதம் நடைபெற்ற தேர்தலின் போது ஸ்ரீலங்கா வீதியில் (முளகி மைதானம்) நடைபெற்ற தேர்தல் பரப்பரைக் கூட்டத்தில் இவர் தலைமை வகித்தார்.

இவர் தற்போது புதிய நிர்வாகத்தில் போசகராக (Patron) ஆக தெரிவு செய்யப்பட்டு இன்று வயதான காலத்திலும் தன்னாலான சேவை செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### திரு. சின்னப்பு நல்லையா

இவர் உடுவிலைப் பிறப்பிடமாகவும், இன்றுவரை வதிவிடமாக வும் கொண்டவர். இவர் உடுவில் MANNS ENGLISH SCHOOL ல் ஆங்கில மொழி மூலம் S.S.C வரை கல்வி கற்றவர். இன்று சிறிலங்கா விதியில் சிரேஷ்ட பிரஜைகளில் இவரும் ஒருவராவர். சமூக ஒடுக்குமுறை காரணமாய் அந்நேரம் இவரால் அரச பதவியொன்றினைப் பெறமுடியாமல் போனது. இவரின் ஒழுக்கம் மிகுந்த வாழ்க்கையாலும், இவரின் இனிய பேச்சுக்களாலும் இவருக்கு எமது சமூகத்தில் தனி ஒரு மதிப்பு காணப்படுகிறது. நிலையத்தின் தலைவராயிருந்த காலத்தில் நிலையத்திற்கு அரும்பெரும் பணியாற்றினார். பொதுமக்கள் மத்தியில், இவரின் தொடர்பாடல் காரணமாய் நிலையத்தின் செயற்பாடுகள் சமுகமாய் செயற்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### மாணிக்கம் மகாலிங்கம் (இராசகிளி)

இவர் ஒரு இளம் தலைமுறைத் தலைவராய் செயற்பட்டுள்ளார். எவருடனும் இனிமையாகப் பேசுவார். இவர் நீதி, நியாயங்கட்கு தலை வணங்குவார். பிழையான காரியங்கள் எதுவாயிருந்தாலும் மனம் திறந்து தெளிவுபடுத்துவார். சுய முயற்சியின் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் உன்னத நிலையிலுள்ளார். இவரைப் போலவே இவரின் சகோதரன் மாணிக்கம் மனோகரன் அவர்களும் அந்நேரங்களில் எம்முடன் இணைந்து பல பொதுப்பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளார். இன்று புலம்பெயர்ந்து வெளிநாட்டில் குடியிருந்தபோதும் பல நிதி உதவிகளை தான் சார்ந்த ஆலயங்கட்கு செய்து வருகிறார். சமூகத்தில் மிகவும் அமைதியாக இருந்தார். சமூக முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர். சமூகத்தில் மதிப்புடன் வாழ்ந்து வருகிறார்.

### திரு. பாலசிங்கம் பாலகிரிதரன் (கிரி)

இவர் ஸ்ரீலங்கா வீதியினைப் பிறப்பிடமாகக் கொண்டவர், சன சமூக நிலைய செயலாளராயிருந்து பல சேவைகளைச் செய்துள்ளார். இவர் இளம் பராயத்திலிருந்து இயல்பாகவே தன்னைச் சமூக சேவையில் ஈடுபடுத்திக் கொண்டவர். யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் புவியியல் பாடத்தில் சிறப்புப் பட்டதாரியான இவர் ஆசிரிய ராய் பணியாற்றுகிறார். இதன் மூலம் இவர் அநேக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி செய்பவராக இன்னும் திகழ்கிறார். யாழ்ப்பாணம் YMCA நிறுவனத்தில் ஓர் வாழ்நாள் உறுப்பினராக விருந்து (LIFE MEMBER) பொதுச் சேவையில் பங்கெடுத்துச் செய்கிறார். இவரின் பணி மென்மேலும் தொடர வாழ்த்துகிறோம்.

### திரு.கந்தையா மாசிலாமணி

இவர் இக்கிராமத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்படமாகவும் கொண்டவர். இவர் ஆரம்பக் கல்வியினை Uduvil Holy Rosary R.C. School, Uduvil Manns English School லும் இடைநிலைக் கல்விதனை யாழ்ப்பாணம் S.T Patricks College லும் பெற்றிருந்தார். சனசமூக நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினராக இருந்ததுடன் நிலையத்தின் பொருளாளராய் பணியாற்றி சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கினர். சுண்ணாகம் பட்டின சபையில் ஒரு ஊழியராகக் கடமையாறி ஓய்வு நிலையிலுள்ளார். இவர் தனது வயதான காலத்திலும் இன்றுவரை பல பொதுப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். குறிப்பாக கிராம அபிவிருத்திச் சபையின் (RDS) செயற்பாடுகள் நடைபெறுவதற்குக் காரணமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகிறார். இதன் மூலம் வீதிகள் புனரமைப்பு, வீடுகட்டு மின் விளக்கு பொருத்துதல் போன்ற நற்செயல்களைச் செய்து வருகிறார். இன்று அதிசிரேஷ்ட பிரசையாக இருந்த போதிலும், வயதானதைப் பற்றிச் சிந்திக்காமல், இன்றும் இளைஞர்கள் போன்று பொதுப் பணிதனைச் செய்து வருகின்றமை போற்றுதலுக்குரியது.

### திரு. இராசந்திரம் ஜோர்ச்

இவர் இளமைக் காலத்தில் சன சமூக நிலையத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். சனசமூக நிலையத்தின் அனைத்து செயற்பாட்டிலும் ஈடுபட்டார். ஆங்கில ஆசிரியராக தனது அரச சேவையை காலி மாவட்டத்தில் ஆரம்பித்து, ஓய்வுபெறும் காலத்தில் சுண்ணாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் உபஅதிபராய் சேவை செய்தார். விஷேசமாய் பாடசாலையில் நடைபெறும் SPORTS ல் அதிக சிரத்தை எடுத்தார். இந்த சேவையை எமது சனசமூக நிலைய விழாக்களிலும் செயற்படுத்தி உதவி செய்தார்: செய்தும் வருகிறார். ஆங்கில மொழியில் சிறந்த புலமை மிக்கவர். எத்தனை வைத்தியர் போன்றவர்கள் உருவாக தனது கற்பித்தல் செயலை இன்றும் செய்து வருகிறார். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும், இன்னும் சமூக சேவையில் ஈடுபட்டு வருகிறார்.

### திரு. வைரவி சுப்பிரமணியம்

இவர் சங்கானை என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாய்க் கொண்டவர். அக்காலத்தில் ஒரு சில சமூகத்தினர் கல்வி கற்பதற்கான உரிமை மறுக்கப்பட்ட வேளையில் சுய முயற்சியினால் ஆங்கில மொழி மூலம் கல்விகற்று SSC பரீட்சையில் சித்தியடைந்தார். அரச சேவையில் எழுதுவினைஞராய் தனது அரச பணியினை ஆரம்பித்தார்.

செல்வி கந்தையா காந்தரூபி (அரிய மலர்) என்பவரைத் திருமணம் செய்ததன் மூலம் எமது உடுவில் கிராமத்தினை வதிவிட மாய் கொண்டார். இவரது மனைவியும் அக்காலத்தில் உடுவில் மகளிர் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் SSC வரை படித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கிராமத்தில் அரச சேவையில் உயர் பதவி வகித்த ஒரு சிலரில் திரு. சுப்பிரமணியம் அவர்களும் ஒருவராவர். அரச பணியின் போது கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பண்பு களை உரித்தாக்கிய இவர், இலங்கையில் இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்த நெருக்கடியான சூழலில் நிலையத்தின் போஷகராக தன்னை இணைத்துக் கொண்டார். சிறார்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு "திருக்குறள் மனனப்போட்டி போன்ற பல நிகழ்வுகள் நடைபெற முன்னின்று உழைத்தார். அரச பணியிலிருந்து ஓய்வு பெற்ற காலத்தில் விவசாயத்தில் ஈடுபட்டு அதில் தன்னிறைவினைக் கண்டார். இவர் ஒரு ஒழுக்கசீலராய் திகழ்ந்தார்.

இவரின் மகன் சுதர்சன் (குமரன்) நிலையத்தின் செயலாளராய் சேவை செய்தார். கிராம வளர்ச்சியில் பல்வேறு பணிகளாற்றினார், குறிப்பாக எமது கிராமம் உட்பட அயல் கிராமங்கட்கும் நன்மை பயக்கும் வகையில் ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றம் பெறுவற்கு இவரும் ஒரு காரணகர்த்தாவாக விளங்கினார். பல இன்னல்கள் மத்தியிலும் பொதுச் சேவையில் தன்னை அர்ப்பணித்த ஒரு சமூக ஆர்வலராய் விளங்குகிறார். இவரது சேவைதனை நிலையம் வரவேற்கிறது.

## ஏனைய சமூக ஆர்வலர்கள் :

இவரினைப் போல திரு த.மகாதேவா (சின்னக்கிளி), வீமர் சின்னத்துரை போன்றோரும் நிலைய வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டனர். மகாதேவா தனது 12 வயது நிரம்பிய சிறுபராயத்தில், சனசமூக நிலையம் 1960ம் வருடம் நடாத்திய CAROL நிகழ்வு களில் பங்குபற்றியது தொடக்கம் சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளில் இணைந்து செயற்பட்டார். குறிப்பாக சனசமூக நிலையத்தினால் நடாத்தப்படும் ஆண்டு விழாக்களில் பெரும்பங் கெடுத்து செயற்பட்டார். தனது பின்னைய காலங்களில் சனசமூக நிலையத்தின் செயற்பாடு களில் ஈடுபாடு குறைவாகக் காணப்பட்ட போதிலும் ஆரம்ப காலங்க ளில் அவர் நிலையத்தில் கொண்ட ஈடுபாடுகள் நினைவு கூரத்தக்க வையாகும். பின்னைய காலங்களில் இவரின் மகன்மார்களும் காத்திரமான பங்களிப்பை நல்கினர். தொழிலாளர் தினமாகிய மே தினத்தில், ஜெறீம் அவர்கள் அடிமையின் வேடம் தாங்கி, சனசமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தின் சார்பில் வாகன ஊர்தியில் கலந்து கொண்டமை மறக்க முடியாத நிகழ்வாகும். இது போலவே திரு. கணபதி ஐயாத்துரை போன்றோரது சேவைகளையும் நினைவு கூர்கிறோம். திரு.வீமர் சின்னத்துரை அவர்கள் இன்றுவரை நிலைய நிகழ்வுகளில் கலந்து கொண்டு நிதி உதவிகள் செய்து வருவது பாராட்டுக்குரியதாகும்.

## திரு. மார்க்கண்டு. பன்னீர்செல்வம் (முன்னாள் தலைவர்)

இவரின் தலைமைத்துவம் 20ம் நூற்றாண்டின் நிறைவு காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, இரண்டு தசாப்தங்கள் வரை இவரது சேவை இடம் பெற்றது. சனசமூக நிலையத்தில் நீண்டகாலம் தலைமைப் பொறுப்பினை வகித்தவர் இவராவர்.

நாட்டில் உள்நாட்டு யுத்தங்கள் தீவிரமடைந்த காலத்தில், எவரும் மக்களுக்கான பொதுச்சேவையில் ஈடுபடாது பயந்து முன்வராத நிலையில் மிகவும் துணிச்சலுடன் எமது கிராம மக்களுக்கு சனசமூக நிலையத்தினுடாக பல நல்ல வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தார். பிரதேச செயலகத்தினூடாக வசதி குறைந்த மக்களுக்கான இலவச வீட்டுத்திட்டத்தினைப் பெறுக் கொள்வதற்கு அயராது அரும்பணி யாற்றி, அச் செயல்தனை நிறைவேற்றி வசதி குறைந்த மக்களின் வதிவிடப் பிரச்சனைக்கு ஓரளவு நிரந்தர தீர்வைப் பெறுக் கொடுத்தார். இது தவிர அவ்வப்போது வீதி புனரமைப்பு போன்ற இன்னோரன்ன பல அபிவிருத்தித் திட்டங்களையும் கிராம மக்கள் நலன்கருதி மேற் கொண்டு உதவினார்.

இவை தவிர ஆரம்பத்தில் கட்டப்பட்டிருந்த சனசமூக நிலையத்தின் சிறிய கட்டடத்தினை, இருமாடிக் கட்டடமாக மாற்றியமைக்கும் பொருட்டு கிராமத்துக்கொரு வேலைத்திட்டத்தில் பங்கெடுத்து அரசினால் வழங்கப் பட்ட ரூபா பத்து இலட்சத்தினைப் பெற்று தற்போது புதுப்பொலிவுடன் கம்பீரமாய் காட்சியளிக்கும் புதிய கட்டடத் தொகுதியினைக் கட்டிய பெருமை இவரது தலைமைத்துவத்திற்கும் நிர்வாகத்திற்கும் சாரும்.

வருசா வருடம் நடைபெறும் ஆண்டு விழா போன்ற பல்வேறு நிகழ்வுகட்டு தனது வாகனம் மற்றும் வளங்களையும் பயன்படுத்தி உதவி செய்வது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. செல்லப்பா இரத்தினம்

எமது ஸ்ரீலங்கா சனசமூக நிலையம் 1960 ஆம் வருடம் ஸ்தாபிக்கப்பட்ட போது ஒரு மூத்த அண்ணன் போல் சமூக உணர்வுடன் செயற்பட்டார். சனசமூக நிலையத்திற்கு எமது கிராமங்கள் நிதி உதவிகள் செய்த போதும், மேலதிக நிதிதேவைகட்காய் நடத்தப்பட்ட கரோல் நிகழ்வுகழில் இவரும் கலந்து கொண்டார். அன்று தொடக்கம் இன்று வரை சனமூக நிகழ்வுகளில் பங்குபற்றி வருகிறார். குறிப்பாக ஆண்டு விழா போன்ற முக்கிய நிகழ்வுகளில் சனசமூக நிலையத்திற்கு உதவியாகச் செயற்பட்டு அரும்பணி ஆற்றியுள்ளார். ஸ்தாபிக்கப்பட்ட காலம் தொட்டு மணிவிழாக் காணும் ஆண்டு வரை சுகபலமாய் இருப்பது கடவுளின் கிருபையாகும். மென்மேலும் இவரின் பணிதொடர வாழ்த்துகிறோம்.

## திரு. பொன்னர் சின்னமணி (முன்னாள் செயலாளர்)

இவர்வளம் கொழிக்கும் சங்கானை என்னும் கிராமத்தினைப்பிறப்பிடமாகவும்திருமணத்தால் உடுவில்ஸிறிலங்கா வீதியினை வசிப்பிடமாகவும் கொண்டவராவார். இவர் இளவாலைபுனிதர்கென்றியரசர் பாடசாலையில் ஆங்கிலமொழிமூலம் கல்விபெற்றிருந்தார். கொழும்பு மாநகரசபையில் அரச தொழில் வாய்ப்பினைப் பெற்ற இவர் ஞானப்பிரகாசம் (செல்லப்பா) திரேசம்மா என்பவரை திருமணம் செய்தார். இவர் உடுவி லில் குடியிருந்த காலத்தில் இவரின் கல்வியறிவு, மொழி ஆற்றல் மற்றும் சமூகசேவை காரணமாய் இவரை நிலையத்தின் செயலாளராய் தெரிவுசெய்தனர். தனக்கு வழங்கப்பட்ட இச்செயலாளர் பதவிதனை தன்னாலியன்றளவு, யுத்த சூழலிலும் நிறைவாகச் செய்தார். இவரும் இவரது மனைவியும் 2020 ம் வருடம் அமரத்துவம் அடைந்தமைக வலைதரும்நிகழ்வாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாக சபை தெரிவு :

ஆரம்ப காலங்களில் நிர்வாகக் குழுவினைத் தேர்ந்தெடுப்பதற் குப் பலவழி முறைகள் கையாளப்பட்டது. வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும் போது அந்நேரம் வருகைதரும் யாரும் வாக்களிக்கக் கூடிய நிலை காணப்பட்டது. இதனால் சனசமூக நிலையம் சரியான, திறமை கொண்ட ஒரு கட்டமைப்பைப் பெற்றுக்கொள்ள முடியா திருந்தது. இப்போது நிர்வாகம் அங்கத்துவப் படிவங்களை விநியோ கித்து, அதனைப் பூர்த்தி செய்து நிலைய அங்கத்தவர்களை முறைப் படி உள்வாங்கியுள்ளது பாராட்டத்தக்கது. குறிப்பாக பொருளாராய் சேவை செய்யும் சந்திரகுமார் ஜான்சியா பிரகாஷ் மற்றும் செயலாள ராய் கடமையாற்றும் சுதர்சன் நிரஞ்சனா அவர்கட்கும் இவர்களைத் திறமையுடன் வழிநடத்திய நிலையத் தலைவர் சிவகுருநாதன் டினேசன் அவர்கட்கும் எமது பாராட்டுக்களை வெளிப்படுத்துகி றோம், இளம் தலை முறையையிட்டு மகிழ்வடைகிறோம்.

## நினைவுக்கல் பதித்தமை பற்றி

எந்தவொரு அரச நிறுவனம் அல்லது தனியார் நிறுவனமாயி னும் அந்தக் கட்டடம் சம்பந்தமாக நினைவுக்கல் பதிப்பது நடை முறையாகும். அது ஒரு வகையில் வரலாற்றினைத் தெளிவுபடுத்தும் ஆவணமாய் கருதப்படும். அந்த வகையில் எமது நிலையத்திலும் நினைவுக்கல் பதித்தமை வரவேற்கப்படுகிறது. ஆனாலும் ஒரு சில விடயங்கள் தெளிவுபடுத்தப்படாமை அவசியம் நிவர்த்தி செய்ய வேண்டிய பணியாகும்.

இந் நினைவுக்கல்லில் சனசமூக நிலையத் தின் ஆரம்பகாலம் தெளிவுபடுத்தப்படவில்லை, இக் குறைபாட்டினை ஏற்கனவே பதிக்கப்பட்ட கல்லில் மாற்றம் செய்ய முடியாது. புதிதாக வேணும் ஒரு வரலாற்றினைத் தெளிவுபடுத்தும் நினைவுக்கல் பதிக்க வேண்டியது நிர்வாகத்தின் பணியாகும்.

அப்பொழுது தான் சனசமூக நிலையத்தின் அறுபது வருடப் பழமை தெரியவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நிர்வாகம் - 2019
# இளைஞர் யுவதிகளின் தலைமை

எமது சனசமூக நிலையம் 60 வருட சேவைக்காலத்தில் கால் பதிக்கும் வேளையில், இளைய தலைமுறையினர்க்கும் பெண்களுக்கும் நிர்வாகத்தில் அதிகளவு முக்கியத்துவத்தை சனசமூக நிலையத்தினர் வழங்கியிருப்பது ஒரு புதிய திருப்பு முனையாக அமைகிறது. இந்நிலையில் நிர்வாகத்திலுள்ள பிரதான இடங்கட்கு இன்றைய தலைவரும், செயலாளர் பொருளாளர் பதவிக்கு யுவதிகளும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. புதிய வாகத்தினரின் (2019) விபரங்கள் வருமாறு:

1. திரு சிவகுருநாதன். டினேசன் - தலைவர்
2. திருமதி. சுதர்சன் நிரஞ்சனா - செயலாளர்
3. திருமதி. பிரகாஷ் ஜான்சியா - பொருளாளர்
4. திரு.மார்கண்டு பன்னீர்செல்வம் - உபசெயலாளர்
5. திரு வே. கெங்கா - உப செயலாளர்
6. திரு செல்லர் முருகேசு - போசகர் நி.சபை உறு
7. திரு. அருநோதயராசா றோய்மெல்
8. திரு. ஆனந்தகுமார் சஞ்சீவன் - விளையாட்டத்துறை தலைவர்
9. திருமதி. காந்தன் ஜெனதா - விளையாட்டத்துறை உபதலைவர்
10. திருமதி. சிவராசா - குணவதி (றூபி) நிலையப் பொறுப்பாளர்
11. திரு. பொன்னையா- கதிரமலை (யோகராசா) நிர்வாக சபை
12. திருமதி ஜஸ்ரின் கனிஸ்ரலா நிர்வாக சபை உறுப்பினர்.
13. திரு.S.மீரா - நிர்வாக சபை உறுப்பினர்.

இதுபோல் எமது கிராமத்திலுள்ள அனைவரையும் ஒன்றிணைத்து, சமூகத்தில் ஒற்றுமையினை நிலைநாட்டி சனசமூக நிலையத்தினை வளர்ச்சிப் பாதையில் மென்மேலும் வழிநடாத்த வேண்டுமென்று வாழ்த்துகிறோம். பிரார்த்திக்கிறோம்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுசரணையாளர்கள்:**

எமது சனசமூக நிலையத்தின் வரலாற்றினை நூல் வடிவில் வெளியிட்ட திரு. தம்பு பாலசுப்பிரமணியம் அவர்களின் செயலினைப் பாராட்டுகிறோம். வரலாறு என்பது மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்ததொன்றாகும். இந்த நூலாகத்திற்கு ஒருசில சமூக அக்கறை கொண்டவர்கள் அனுசரணையாளர்களாய் இருந்த மையிட்டு மகிழ்வடைகின்றோம். இக்காலத்தில் இவர்மேலும் பல ஆக்கங்களை படைப்பதனை எதிர்பார்க்கிறோம். அன்புடன்....

1. திருமதி புஸ்பமலர் (பட்டு) அன்ரனி கொழும்பு/சுவிஸ்
2. திரு. சூசைப்பிள்ளை எட்வேட் றெஜினோட்
3. திரு. லோறன்ஸ் இராஜகுமார்
4. திரு. மகாதேவா யூஜின் கலிஸ்ரஸ்
5. திரு. முதலி பரமநாதன்
   169/1, அம்பலவாணர் வீதி, உடுவில்
6. திரு. கிருஷ்ணர் இராஜேஸ்வரன் (ரவி) உடுவில்
7. திரு. கந்தையா மாசிலாமணி. உடுவில்
8. திரு. பாலசிங்ம் பாலகிரிதரன் (கிரி) உடுவில்
9. திரு. ஐயாத்துரை சகீன்ஸ்குமார்

நன்றி

நிதி அச்சகம் தொடர்பாளர்
பாலசிங்கம் பாலகிரிதரன் (கிரி) - ஆசிரியர்.
யா/அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி.
தொ.பே : 0777 343348



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கறுப்பு நாள் 28.11.1987 Black Day
## எமது கிராமத்தின் துயரம் Tragedy of our Village

ஒரு நாணயத்திற்கு இருப்பக்கங்கள் இருப்பது போல் எந்த ஒரு காரியத்திலும் நன்மை தீமை, இன்பம் துன்பம், ஆக்கம் அழிவு , வெற்றி தோல்வி என்பன கலந்திருக்கும் இவைகள் போன்றுதான் யுத்த சூழ்நிலையிலும் நிம்மதியுடன் இருந்த எமது கிராமம் 1987 நவம்பர் 28ம் திகதி கறுப்பு நாளாக மாறியது.

இலங்கை இராணுவம், இந்திய இராணுவம், போராளிக் குழுக்கள் என்பவற்றுக் கிடையில் 1980 களிலிருந்து ஆயுதமோதல் கள் வலுப்பெற்று வந்தது. இம்மோதல்களில் சகலதரப்புக்களுக்கும் விலைமதிக்க முடியாத உயிர்ச்சேதம் ஏற்பட்டமை கவலைதரும் நிகழ்வாகும்.

1987ம் வருடம் ஒக்டோபர் மாதம் 10ம் திகதி இந்திய அமைதிகாக்கும் படைக்கும் **(IPKF)** விடுதலைப் புலிகளுக்குமிடை யில் பயங்கர மோதல் ஏற்பட்டது. மக்கள் மிகுந்த பயப்பீதியுடன், ஊரடங்குச் சட்டத்தின் மத்தியில் ஏக்கத்துடன் இருந்தனர். 1987ம் நவம்பர் 28ம் திகதி ஏறிகணைகள் கிராமத்தில் ஆங்காங்கு வீழ்ந்து வெடித்தது. ஆதிகாலை 4.30 மணிக்கு நடத்தப்பட்ட ஏறிகணை வீச்சினால் கிராமத்து மக்கள் செய்வதறியாது சிதறியடித்து பாதுகாப்பிற்காக அடைக்கலம் தேடி ஓடினார்கள். அந்நேரம் உடுவில் செபமாலை மாதா ஆலயம் பலருக்கு தஞ்சம் அடையும் இடமாகத் தெரிந்தது. ஆலயத்தை நோக்கி மக்கள் திரண்டனர். காலை 5.30 மணியளவில் ஆலயக்கட்டடத்திற்கருகில் ஒரு ஏறிகணை வீழ்ந்து வெடித்தச்சிதறியது. அந்த ஏறிகணை ஒன்பது பேரின் உயிர்களைக் காவு கொண்டது. அந்த ஸ்தலத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர். ஏனைய ஆறு (06) பேரும் வைத்தியசாலையில் அல்லது வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தனர். உயிர் பிரிந்தவர்களுக்காக உறவுகள் இன்றும் கண்ணீர் வடிக்கின்றார் கள். இந்த அனர்த்தத்தில் மரணமடைந்தவர்களின் பெயர்களை நினைவுக்கு கொண்டு வருகின்றோம்.

1. ஆசிர்வாதம் (இராசதுரை) ஜெசிந்தா - மாணவி
2. தம்பிப்பிள்ளை ஜெயரட்ணம் - (யப்பான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சின்னவி வைரவி - குடும்பஸ்தர்

4. சூசைப்பிள்ளை கிறிஸ்ரி றொனால்ட் **A/L** மாணவன்

5. வைரவி பாலசிங்கம் ஊழியர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை

6. செல்லர் ஞானக்கிளி (பெண்) அயல் வீதியினை சேர்ந்தவர்

ஏனைய மூவரின் பெயர் விபரங்கள் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

## 1) நடைபெற்ற சம்பவம் பற்றிய சோக வரலாறு

செல்வி ஆசிர்வாதம் ஜெசிந்தா - மாணவி

இந்த ஏறிகணைத்தாக்குதல் நடைபெற்ற போது காயப்பட்டவர்களைத் தவிர ஏனையோர் சிதறுண்டு தலை தெறிக்க ஓட்டம் பிடித்தனர். காயப்பட்ட ஜெசிந்தாவை வீட்டுக்காரர் குறிப்பாக உடன்பிறந்த சகோதரன் லோறன்ஸ் இராஜகுமார் (வவா) தனது **CN** 4439 என்ற **A40** காரில் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் வைத்தியசாலை நோக்கி சிகிச்சைக்காக விரைந்தார். வழி நெடுகிலும் இந்திய இராணுவத்தின் காவல் அரணகள். ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படாத நேரம் வைத்தியசாலைக்குச் செல்லமுடியாத அவலம். தாங்கள் அணிந்திருந்த வெள்ளை மேலங்கியைக் கழற்றி வெள்ளைக்கொடி போல் அசைத்துக்காட்டி அனுமதி கேட்கிறார்கள். இராணுவம் யுத்தநிலையில் துப்பாக்கியைக் காட்டிப்பயமுறுத்தி மிக ஆக்ரோசமாய் நடந்து கொள்கிறார்கள். காயமடைந்தவரின் காயத்திலிருந்து இரத்தம் வெளியேறியபடியே இருக்கிறது. பிற்பகல் மூன்று மணியளவில் வைத்தியசாலையை அடைந்த போது ஜெசிந்தாவின் உயிர்பிரிந்துவிட்டது. எவ்வளவு முயற்சி எடுத்தும் உயிரைப்பாதுகாத்துக் கொள்ள முடியாதது மறக்க முடியாத கவலையாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2) சூசைப்பிள்ளை கிறிஸ்ரி றொனாஸ்ட் A/L மாணவன் நடந்த அனர்த்தம் பற்றிய விபரம் :

கிறிஸ்ரியும் தனது குடும்பத்தினர் சகிதம் உயிர்தப்ப உடுவில் செபமாலைமாதா ஆலயத்திற்கு அடைக்கலம் தேடி ஓடினார்கள். காலை 05.30 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஏறிகணையினால் இவரது இடுப்புப்பகுதி செல் துண்டினால் பயங்கரமாய் காயப்பட்டது. காயப்பட்டவரை வைத்தியசாலைக்கு எடுத்து செல்ல வாகன வசதிகள் எதுவுமற்ற அவலநிலை. உடனே பக்கத்து வீட்டில் உள்ள மாட்டு வண்டியை இழுத்துக்கொண்டு வந்து காயப்பட்டவரை வண்டியில் ஏற்றி வண்டியில் தாயையும் ஏற்றி அவரது மடியில் படுக்க வைத்து சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலையை நோக்கி செல்லப்பா இரத்தினம் அண்ணர் அவர்களும் உடன்பிறந்த சகோதரன் எட்வேட் றெஜினோல்ட்டும் வண்டியை இழுத்துக் கொண்டு சென்றனர். ஊரடங்கு சட்டம் இருந்த காரணத்தால் மருதனார்மட சந்தியில் காலை 8.30 மணி வரை தடுத்து நிறுத்தப்பட்டு அதன் பின்னரே போக அனுமதிக்கப்பட்டனர். இணுவில் வைத்தியசாலையை அடைந்தபோது அங்கும் சிகிச்சை பெற முடியவில்லை. இரத்தபெருக்கால் உடல் செயற்பாடுகள் குறைந்து கொண்டு போய்க்கொண்டு இருந்த நிலை கொக்குவில் எனும் இடம் வந்தபோது உயிர் பிரிந்து விட்டது. அப்படியே உடல் சுண்டுக்குளி எனும் கிராமத்திற்கு எடுத்து செல்லப்பட்டு மறுநாள் காலை பரி.யோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. உடன் பிறந்த சகோதரர்கள், ஒன்றுவிட்ட சகோதரர்கள் மரண செய்தியைக் கேட்டு, மரண வீட்டுக்கு ஆபத்துக்கள் மத்தியில் நடந்து வந்து கலந்து கொண்டார்கள்.

இப்படியே அந்த ஒன்பது பேரும் மரணத்தை தழுவிக் கொண்டார்கள். மனிதம் கண்ணீர் வடிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3) அமரர் திரு.சின்னத்துரை வேல்சுதாகரன் B.A Ceylon ஆசிரியர் யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை

இவர் சின்னததுரை பஞ்சாதேவி தம்பதியரின் புதல்வராவார். இவருக்கு 5 வயதான போது குழந்தை பருவத்தில் 1982 இல் தாயார் மரணமடைந்து விட்டார். தந்தையார் பெரும் சிரமத்தின் மத்தியில் கல்வி செல்வத்தையும் அரவணைப்பையும் கொடுத்த காரணத்தால் B.A பட்டதாரி ஆனார். யா/சங்கானை சிவப்பிரகாசம் வித்தியா சாலையில் ஆசிரியராய் பணி புரிந்தார். இந்து சமயத்தில் மிகுந்த பற்றுடையவர் பல இடங்களில் இந்து சமயம் சார்ந்த சொற்பொழி வுகள் ஆற்றி உள்ளார். சிறந்த பேச்சுவன்மை கொண்டவர். சனசமூக நிலையத்தில் செயலாளராய் சேவை செய்தவர். தனது வாலிபப் பராயத்தில் இனம் தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானார். இவரை இன்றும் நினைவு கூருகின்றோம்.

இதைத்தவிர எமது கிராமத்தில் காணாமல் போனோர் பட்டியலில் மூன்று ஜீவன்கள் உள்ளனர். இவர்களிற்கு என்ன சம்பவித்ததோ தெரியாது. இவர்களை எண்ணி அந்த குடும்பத்தினர் இன்றும் கவலையுடன் உள்ளனர்.

1. திரு தம்பையா சௌந்தரராஜன் காணாமல் போனோர்
2. திரு தம்பித்துரை இராசன் காணாமல் போனோர்
3. திரு அப்புதுரை அப்பன் காணாமல் போனோர்

## குறைகளை நிறைவாக்குவோம்.

இம் மணிவிழா மலரில் ஒரு சில குறைபாடுகள் இருக்கலாம். குறிப்பாக முன்னாள் தலைவர்களின் நிழல்படங்கள் பிரசுரிக்க முடியவில்லை. சகலரின் படங்களையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஒருவரைவிட்டு ஒருவரின் படத்தை போடுவது என்பது பிழையானது இனிவரும் நாட்களில் எமது நிர்வாகம் இக்குறைகளை நிவர்த்தி செய்யும் என நம்புகின்றோம். நிறைவானது வரும் போது குறைவுகள் மறைந்து போகும்.

- முற்றும் -

**நூலாசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்நூலாசிரியர் பற்றி...

இவ்வரலாற்றினை எழுதும் திரு.தம்பு பாலசுப்பிரமணியம் அவர்கள் எமது இக் கிராமத்தினைப் பிறப்பிடமாகக் கொண்டவராவர். அரச சேவையில் உயர் பதவி வகித்து ஓய்வு நிலையிலுள்ள இவர் தனது மாணவப் பருவத்திலிருந்து சமூக சேவையில் ஆர்வலராய் திகழ்ந்தார்.

ஸ்ரீலங்கா சனசமூக நிலையம் 1960 ஆம் வருடம் ஸ்தாபிக்கப்பட்ட போது முதலாவது நிலையத் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டார். எமது நிலையத்தின் வரலாற்றினை பெரும் சிரமத்தின் மத்தியில் நூல் வடிவில் வெளிக்கொணரும் இவரின் சேவை மகத்தானது. இவரின் இது போன்ற சமூக சேவைகள் மென்மேலும் தொடர வாழ்த்துகிறேன்.

நன்றி.

**சின்னப்பு - நல்லையா**
**முன்னாள் நிலையத்தலைவர்**
**பிரபல கட்டட ஒப்பந்தகாரர்**
**ஸ்ரீலங்கா வீதி, உடுவில்**

யாழ் பதிப்பகம்
021 221 4949 / 0777 393427

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org